வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

07.12.2020 திங்கட்கிழமை




## கொட்டித் தீர்த்தது கனமழை

# மீண்டும் வெள்ளத்தில் மிதக்கிறது யாழ். நகரம்




யாழ்ப்பாணம், டிசெம்பர் 07

புரெவிப் புயலால் வடக்கில் தொடங்கிய கனமழை நேற்றும் தொடர்ந்தது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் பல பகுதிகளிலும் நேற்று மழை கொட்டித் தீர்த்தது. 02

# 2,000ஐ கடந்தது

## சிறைகளில் தொற்று

கொழும்பு, டிசெ. 07

சிறைச்சாலை தொற்றாளர்கள் மேலும் அதிகரித்துள்ள நிலையில் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 51ஆக அதிகரித்துள்ளது. தொற்று உறுதியானவர்களில் 91 அதிகாரிகள் உள்ளடங்குகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களில், 38 அதிகாரிகளும், 562 கைதிகளுமாக 600 பேர் பூரண குணமடைந்துள்ளனர் என்றும், ஏனையோர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ -எ)

## மீண்டும் எகிறும் தொற்று: நேற்றும் 649 நோயாளிகள்!

கொழும்பு, டிசெ. 07

நாட்டில் நேற்றைய தினம் 649 கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர் என்று சுகாதார மேம்பாட்டுப் பணியகம் தெரிவித்துள்ளது.

இதனால், நாட்டில் மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 27 ஆயிரத்து 877ஆக உயர்ந்துள்ளது. இதேவேளை தொற்று சந்ததேகத்தில் 461 பேர் தனிமைப்படுத்தல் நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை நேற்றுவரை 20 ஆயிரத்து 460 பேர் தொற்றிலிருந்து பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். 7 ஆயிரத்து 280 பேர் இன்னமும் கொரோனா சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## கொரோனா மரணம் 140ஆக உயர்ந்தது

கொழும்பு, டிசெ. 07

கொரோனாவால் நாட்டில் நேற்று 3 பேர் உயிரிழந்தனர் என்று சுகாதார மேம்பாட்டுப் பணியகம் தெரிவித்துள்ளது.

கொழும்பு - கோட்டை பகுதியை சேர்ந்த 98 வயது முதியவரும், ஹதுடுவை பகுதியை சேர்ந்த 80 வயது முதியவரும், மக்கொன பகுதியை சேர்ந்த 71 வயது முதியவருமே இவ்வாறு உயிரிழந்தனர்.

இந்த மரணங்களால் நாட்டில் ஒட்டுமொத்த கொரோனா உயிரிழப்பு 140ஆக உயர்ந்துள்ளது.

## கிளிநொச்சி இளைஞருக்கு கொரோனா

கிளிநொச்சி, டிசெ. 07

கிளிநொச்சி பாரதிபுரத்தை சேர்ந்த இளைஞர் ஒருவருக்கு கொரோனா தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டது.

மலர்ச்சாலை நிலையத்தில் பணியாற்றும் 20 வயது இளைஞனுக்கே அநுராதபுரம் பரிசோதனைக்கூடத்தில் நடத்தப்பட்ட சோதனையில் தொற்று உறுதி 02

## அரசியல் தலையீடுகளாலேயே சஹ்ரானை கைது செய்யவில்லை

### பிரதி சொலிசிட்டர் சாட்சியம்

கொழும்பு, டிசெ. 07

அரசியல் தலையீட்டாலேயே 2017ஆம் ஆண்டு காத்தான்குடி அல்லியார் சந்தியில் இடம்பெற்ற மோதலின் பின்னர் பொலிஸாரால் சஹ்ரான் ஹசீமை கைது செய்ய முடியாமல் போனது என்று பிரதி சொலிசிட்டர் நாயகம் திலீப பீரிஸ் 02

## இந்த மாத இறுதிக்குள் 8,000 கைதிகள் விடுதலை!

### இராஜாங்க அமைச்சர் லொஹான் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 07

"இந்த மாத இறுதிக்குள் குறைந்தது 8 ஆயிரம் கைதிகள் விடுவிக்கப்படுவார்கள்", என்று சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் கைதிகள் மறுவாழ்வு இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வெலிக்கடை சிறைக்குச் சென்ற 02

### கொரோனா தொற்று சந்தேகம்:

## ஆறு சிறைகளின் 181 கைதிகள் இயக்கச்சியில் தனிமைப்படுத்தல்

யாழ்ப்பாணம், டிசெ. 07

தென்னிலங்கையிலிருந்து ஆறு சிறைச்சாலைகளின் கைதிகள் ஐந்து பஸ்களில் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் யாழ்ப்பாணம் அழைத்து வரப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

கொரோனா தொற்று சந்தேகத்தில் 181 கைதி 02

## கிளிநொச்சி மாவட்டத்தின் 6 கிராமங்களுக்கு எச்சரிக்கை

கிளிநொச்சி, டிசெ. 07

கிளிநொச்சி கனகாம்பிகைக்குளத்தின் நீர்மட்டம் அதிகரித்து வருவதால் வான் பாயும் அளவு அதிகரித்துள்ளது. இதனால் அதன் நீரேந்து பகுதிகளில் வாழும் மக்களை மிக அவதானமாக இருக்குமாறு கிளிநொச்சி அனர்த்த முகாமைத்துவ நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. 02

## மஹர சிறைக்கலவரம்: ஆறு பேரே அடையாளம்

கொழும்பு, டிசெ. 07

மஹர சிறைச்சாலை கலவரத்தின்போது பலியான 11 கைதிகளில் ஆறு பேரின் உடல்களை அவர்களது உறவினர்கள் அடையாளம் காட்டியுள்ளனர் என்று பொலிஸ் பேச்சாளர் அஜித்ரோஹன நேற்றுத் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக் 02

## ஊரடங்கு இல்லையேல் தொற்று தீவிரமடையும்

### எச்சரிக்கிறது அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

கொழும்பு, டிசெ. 07

கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவதில் சிக்கலுள்ள பகுதிகளில் மக்களின் ஒத்துழைப்பு குறைவாகக் காணப்படுகின்றது. தனிமைப்படுத்தல் என்பதைத் தாண்டி குறுகிய காலத்துக்கு பொலிஸ் ஊரடங்குச் சட்டத்தை நடை 02

## இந்த மாதம்....

இராஜாங்க அமைச்சர், கூரை மீதேறி போராட்டம் செய்யும் கைதிகளுடன் பேச்சு நடத்தினார். அவர்களின் கோரிக்கைகளை பரிசீலிப்பதாகவும் உறுதியளித்தார்.

இதன்போது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர், "நாட்டின் சிறைச்சாலைகளில் 28 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கைதிகள் உள்ளனர். சுமார் 11 ஆயிரம் கைதிகளுக்கு போதுமான வசதிகள் உள்ளன.

கைதிகளின் சிறைத் தண்டனையை மாற்ற நான்கு ஆண்டு மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றது. இதன்படி, மதிப்பீட்டிற்கு உள்பட்டு தூக்குத் தண்டனை வழங்கப்பட்ட கைதிகளுக்கு ஆயுள் தண்டனையாக மாற்றப்படும்.

இதேவேளை, தூக்குத் தண்டனை கைதிகளின் தண்டனை ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டால், ஆண்களுக்கு 21 ஆண்டுகளும் பெண்களுக்கு 18 ஆண்டுகளும் தண்டனைக் காலமாக மாற்றமடையும். அத்துடன், நன்னடத்தையின் அடிப்படையில், அவர்கள் தண்டனைக் காலத்துக்கு முன்னதாக ஜனாதிபதியால் பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்யப்படவும் சந்தர்ப்பம் உள்ளது", என்றார்.

## மீண்டும்....

**யாழ்ப்பாணம்**

யாழப்பாணத்தில் நேற்று மதியம் 2.30 மணிக்குப் பின்னர் பெய்யத் தொடங்கிய மழை, 4 மணியின் பின்னர் கனமழையாக மாறியது. நேற்றிரவு 8.30 மணி வரை 150 மி.மீற்றர் மழைவீழ்ச்சி பதிவானதாக வானிலை அவதானிப்பு நிலையம் தெரிவித்தது.

இந்தக் கனமழையால் யாழ்ப்பாணம் மாநகரத்தின் பெரும்பாலான பகுதிகள் மீண்டும் வெள்ளத்தில் மூழ்கின. யாழ். மாநகரப்பகுதி, கொக்குவில், கோண்டாவில், தாவடி, நல்லூர், கல்வியங்காடு, சாவகச்சேரி நகர் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் பல வீடுகளிலும் வெள்ளம் புகுந்துள்ளது. மக்கள் பலரும் இடம்பெயர்ந்து உறவினர் வீடுகள், பொது இடங்களில் தங்கியுள்ளனர்.

நேற்றிரவு வரையான தகவலின்படி, 22 ஆயிரத்து 620 குடும்பங்களை சேர்ந்த 74 ஆயிரத்து 995 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் 358 குடும்பங்களைச் சேர்ந்த 1340 பேர் இடம்பெயர்ந்து இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அத்துடன், 93 வீடுகள் முழுமையாகவும், 2,969 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன என்று மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்தது.

**கிளிநொச்சி**

கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்றுக் காலை முதல் கனமழை இரவு வரை கனமழை பெய்தது.

நேற்று மதியம் வரையான தகவல்களின்படி 1,926 குடும்பங்களை சேர்ந்த 5,668 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 88 குடும்பங்களை சேர்ந்த 134 பேர் இடம்பெயர்ந்துள்ளனர் என்று மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்தது.

**பாடசாலைகளுக்கு விடுமுறை**

கடும் மழை தொடர்வதால் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் பாடசாலைகளுக்கு இன்று விடுமுறை அளிக்கப்பட்டதாக வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் அறிவித்துள்ளார்.

**புதன்கிழமை வரை மழை தொடரும்**

வடக்கு மாகாணத்தில் நாளை மறுதினம் புதன்கிழமை வரை மழை தொடரும் என்று யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறை விரிவுரையாளரும் கால நிலை அவதானியுமான நா.பிரதீபராஜா தெரிவித்துள்ளார். அத்துடன் இன்று காலை முதல் கனமழை தொடரலாம் என்றும் அவர் கூறினார்.

**மக்கள் அவதானம்!**

வடக்கில் மழை தொடரும்போது காற்றின் வேகம் அதிகரிக்கும். அத்துடன் மின்னல் தாக்கங்களும் ஏற்படும். எனவே பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக செயல்பட வேண்டும் என்று இலங்கை வானிலை அவதானிப்பு நிலையம் எச்சரித்துள்ளது. (ஐ-2)

## கிளிநொச்சி....

செய்யப்பட்டது.

இரு வாரங்களுக்கு முன்னர், எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பணியாற்றும் முதியவர் ஒருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து அவருடன் தொடர்புபட்ட குடிதண்ணீர் விற்பனை நிலையம், மலர்ச்சாலை பணியாளர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர்.

இதில் குடிதண்ணீர் விற்பனை நிலையத்துடன் தொடர்புடைய மூவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது. இந்நிலையிலேயே மலர்ச்சாலையில் பணியாற்றும் ஒருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

## கிளிநொச்சி இளை....

ஆனந்தபுரம், இரத்தினபுரம், பன்னங்கண்டி, மருதநகர், பரந்தன் மற்றும் உமையாள்புரம் பகுதிகளில் வாழும் மக்களுக்கே இவ்வாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இரணைமடுக்குளத்தின் நீர் மட்டம் 28 அடிக்கும் அதிகமான கொள்ளளவை தற்போது கொண்டிருப்பதாகவும் அளவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அரசியல்....

தெரிவித்துள்ளார்.

சஹ்ரான் ஹசீம் மற்றும் தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பு தொடர்பாக ஆலோசனைகளை பெறுவதற்கு குற்றத் தடுப்பு பிரிவால் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட இரண்டு கோப்புகள் குறித்து ஆணைக்குழுவில் நேற்றுமுன்தினம் விசாரிக்கப்பட்டது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து ஆணைக்குழு விசாரித்ததுடன் இதன்போது குறித்த ஆவணங்களுக்கு பொறுப்பாக செயற்பட்ட அரச சட்டத்தரணி மலிக் ஹயீஸிடம் கண்காணிப்பு அதிகாரியாக கடமையாற்றிய பிரதி சொலிசிட்டர் நாயகம் அசாத் நவாவி சாட்சியம் வழங்கினார்.

ஜனாதிபதி ஆணைக்குழு அவரிடம் குறித்த ஆவணத்தை மலிக் ஹயீஸிடம் கையளித்த பின் அது தொடர்பில் தேடி பார்த்தீர்களா? என வினவியது.

இதற்கு பதிலளித்த அவர் "இல்லை, தாக்குதல் நடத்தப்பட்டு இரண்டு மூன்று வாரங்களாகியும் அது குறித்து தேடி பார்க்கவில்லை. காரணம் நான் அந்த சந்தர்ப்பத்தில் உயர் நீதிமன்றத்தில் 500 வழக்குகளையும், சிறுவர் துஷ்பிரயோகம் சம்பந்தமான 3,000 வழக்குகளுக்கும் பொறுப்பாக செயல்பட்டேன் - என்றார்.

மற்றும்படி குற்றத்தடுப்பு பிரிவால் அனுப்பப்பட்ட முதலாம், இரண்டாம் மனுக்களில் குறிப்பிடத்தக்க ஆலோசனைகளை முன்வைக்கும் அளவுக்கு விடயங்கள் முன்வைக்கப்படவில்லை. இதனையடுத்து சஹ்ரான் ஹசீம் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தால் நிர்வகிக்கப்பட்ட மற்றுமோர் ஆவணம் குறித்து பிரதி செலிசிட்டர் நாயகம் திலீப பீரிஸ் சட்சியம் அளித்தார்.

"நீதிபதி அவர்களே காத்தான்குடி பகுதி மௌலவி ஒருவர் தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் ஊடாக முஸ்லிம் பிரிவினைவாத செயற்பாடுகள் குறித்து கடிதம் மூலம் குறிப்பிட்ட தரப்பினரை தெளிவுப்படுத்தியதாக கூறினார்.

இதன்போது குறுக்கிட்ட ஆணைக்குழுவின் தலைவர், சஹ்ரானையும், ரில்வானையும் கைது செய்ய முடியாமல் போனதற்கான விசேட காரணம் எதுவும் உண்டா என வினவினார்.

இதற்கு சில அரசியல் தலைவீடுகளே காரணமாக அமைந்தாக பிரதி சொலிசிட்டர் நாயகம் திலீப பீரிஸ் என்றும் தெரிவித்தார்.

# முன்னாள் அமைச்சர் எக்கநாயக்க காலமானார்

கொழும்பு, டிசெ. 07

முன்னாள் அமைச்சர் ரி.பி. எக்கநாயக்க நேற்று காலமானார். சில நாட்களாக சுகவீனமடைந்திருந்த அவர், குருநாகலில் உள்ள மருத்துவமனை ஒன்றில் சேர்க்கப்பட்டிருந்தார்.

இந்நிலையிலேயே அவர் நேற்று முற்பகல் மரணமானார் என்று அவரின் குடும்பத்தவர்கள் தெரிவித்தனர்.

66 வயதான ரி.பி. எக்கநாயக்க ரணில் - மைத்திரி கூட்டு அரசாங்கத்தில், காணி இராஜாங்க அமைச்சராகப் பதவி வகித்திருந்தார். கடந்த ஒகஸ்ட் மாதம் நடந்த பொதுத் தேர்தலில் பொதுஜன பெரமுன சார்பில் குருநாகல் மாவட்



டத்தில் போட்டியிட்டு தோல்வியடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆறு சிறைகளின்....

களே இவ்வாறு அழைத்து வரப்பட்டு இயக்கச்சி தனிமைப்படுத்தல் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மஹர, கொழும்பு, மகசின், கேகாலை, அநுராதபுரம், நீர்கொழும்பு சிறைச்சாலைகளை சேர்ந்த கைதிகளே இவ்வாறு இயக்கச்சிக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

சிறைச்சாலை கொத்தணிகளில் கைதிகள் பலர் தொற்றுக்கு இலக்கான நிலையிலேயே இவர்கள் இயக்கச்சி தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். (ஐ)

## மஹர....

கிழமை இரண்டு உடல்களை குடும்பத்தவர்கள் அடையாளம் காட்டினார்கள், நேற்றுமுன்தினம் நான்கு உடல்கள் அடையாளம காணப்பட்டன என்று பொலிஸ் பேச்சாளர் கூறினார். அடையாளம் காணப்பட்டவர்கள் ஜா-எல, வத்தளை, மினுவாங்கொடை அங்குருவத்தோட்டை வெலிவேரிய மற்றும் எந்தரமுல்லையை சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## ஊரடங்கு....

முறைப்படுத்த நடவடிக்கை அவசியம் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

கொழும்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் நடத்திய ஊடக சந்திப்பில் அதன் பணிப்பாளர் மருத்துவர் ஹரித அளுத்கே இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும், ஆரம்பத்தில் அபாயமற்ற பகுதிகளாக அடையாளப்படுத்தப்பட்ட மாவட்டங்கள் மற்றும் மாகாணங்களில் கூட தற்போது கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் இனங்காணப்படுகின்றனர். கிழக்கில் சம்மாந்துறை மற்றும் அக்கரைப்பற்று, புத்தளத்தில் சில பகுதிகள், இரத்தினபுரி, மத்திய மாகாணத்தில் கண்டி மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் தொற்றாளர்கள் இனங்காணப்படுவார்கள் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை.

நாட்டின் மொத்த தொற்றாளர்களில் 30 வீதத்துக்கு அதிகமானோர் கொழும்பு மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் உள்ளனர். இதனால் இந்தப் பகுதியிலேயே அதிக அவதானம் செலுத்தப்படுகின்றது. இவ்வாறு கொழும்பில் காணப்படுகின்ற அபாயத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கும் அதேவேளை, புதிதாக பண்டாரகம - அட்டுலுகம பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள பரவலைக் கட்டுப்படுத்துவது மிகவும் அவசிய மாகும். அவ்வாறு செய்தால் மாத்திரமே தொற்றாளர்கள் தொடர்பில் பொதுச் சுகாதார அதிகாரிகள் மற்றும் பிரதேச மருத்துவ அதிகாரிகளுக்கு முறையான தீர்மானங்களை எடுக்கமுடியும். அவ்வாறில்லை என்றால் பரவல் எந்தளவுக்குத் தீவிரமடையும் எனக் கூற முடியாது", என்றார். (ஐ-எ)

# யாழில் பரிசோதனை மூவருக்கு கொரோனா



யாழ்ப்பாணம், டிசெ. 07

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் நேற்று நடத்தப்பட்ட கொரோனா பரிசோதனையில் 3 பேருக்கு தொற்று உறுதியானது.

இவர்கள் 3 பேரும் முல்லைத் தீவு தனிமைப்படுத்தல் மையத் தில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்கள் என்று வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத் தியமூர்த்தி தெரிவித்தார். (ஐ-3)

## சாணக்கியம்....

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரபலம்மிக்க இராணுவ தளபதியாக இருந்த டென்ஸில் கொப்பேகடுவகூட இக்கல்லூரியின் பழைய மாணவரென்பது குறிப்பிடத்தக்கது.

இதுதவிர, தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவராக இருந்து புலிகளது யாழ் மாவட்ட தளபதியாக இருந்த சதாசிவம் கிருஸ்ண குமாருக்கு (கிட்டு) பல்வேறு வகையிலும் உறுதுணையாக இருந்த ரஹீம் கனகரட்ணம்கூட கண்டி திரித்துவக் கல்லூரியின் பழையமாணவரென்பது குறிப்பிடத்தக்கது.

**நம்பிக்கை ஒளிக்கீற்று**

வடக்கு-கிழக்கு தமிழர்களைப் பொறுத்தவரை இனிவருங்காலங்களில் ஒளிவு மறைவற்ற அரசியல் நடவடிக்கைகளே தேவையென்பதையே வடக்கு-கிழக்கு மக்கள் கடந்த பொதுத்தேர்தலில் சுட்டிக்காட்டியுள்ளார்கள். இந்த ஒளிவு மறைவற்ற போக்கை முன்னெடுத்துச் செல்லக்கூடிய எதிர்கால அரசியல் சந்ததியை பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய ஒருவராகவே இராசமாணிக்கம் சாணக்கியன் காணப்படுகிறார்.

தென்னிலங்கை அரசியல் கோதாவில் வடக்கு-கிழக்கு தமிழர்களின் அரசியல் பலம், பலவீனங்களை நன்கறிந்த ஒரு நிலையே காணப்படுகின்றது. தற்போதைய தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினரான எம். ஏ. சுமந்திரன் அடிக்கடி குறிப்பிடும் ஒரு விடயமென்னவென்றால், யுத்தத்தில் தோல்வியைக் கண்ட பின்னர் அரசியல் அணுகுமுறைகளைத் தவிர வேறுவழிகளில் தீர்வுகளை பெறமுடியாதென்பதேயாகும். ஆனாலும், அவர் குறிப்பிட்ட அரசியல் அணுகுமுறைகளில்கூட தொய்வு நிலையும், ஒளிவுமறைவும் காணப்படுகின்ற நிலையில், இராசமாணிக்கம் சாணக்கியன் போன்ற இளம் தலைவர்களின் அரசியல் பிரவேசம், தமிழ் அரசியலில் நம்பிக்கை ஒளிக்கீற்றுக்களை வெளிப்படுத்துவதாகவே இருக்கின்றது.

ஈழநாடு
Eelanadu
07.12.2020 திங்கட்கிழமை
சார்வரி, கார்த்திகை 22

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

e-mail: editor@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# டோவல் - சம்பந்தன் சந்திப்பின் 'பின்னணி'

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் குமார் டோவல், இந்தியா - இலங்கை - மாலைதீவு ஆகிய நாடுகளுக்கிடையிலான கடல்சார் பாதுகாப்பு தொடர்பான முத்தரப்பு கலந்துரையாடலுக்காக விஜயம் செய்திருந்தார் என்பதே வெளியில் சொல்லப்பட்ட செய்தி. இதற்கப்பால், அவர் கொழும்பில் தங்கியிருந்தவேளையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் என்ன கூறினார்? ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் என்ன சொன்னார்? - என்பதை எவரும் அறியார்.

இதனைத் தொடர்ந்து, டோவல் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனையும் சந்தித்து உரையாடியிருந்தார். பொதுவாக, இந்திய தரப்புக்கள் விஜயம் செய்யும்போது, தமிழ்த் தரப்பினரை சந்திப்பது வழக்கமான ஒன்று. போர் இடம்பெற்ற காலத்தில் கூட்டமைப்பை மட்டுமல்லாது, கூட்டமைப்பிற்கு எதிர்நிலையிலிருந்த, சித்தார்த்தன், ஆனந்தசங்கரி, ஸ்ரீதரன் (சுகு) ஆகியோர் அடங்கிய மாற்று தமிழ்த் தரப்பினரையும் சந்தித்து, அவர்களது கருத்துக்களையும் அவர்கள் செவிமடுப்பதுண்டு.

அந்தக் காலத்தில் கூட்டமைப்பு என்பது முற்றிலும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின்கீழ் இருந்தது. புலிகளை இந்தியா ஏற்றுக்கொள்ளாது விட்டாலும்கூட, புலிகளின் ஜனநாயக முகம்போன்று செயல்பட்டுக்கொண்டிருந்த கூட்டமைப்பை இந்தியா புறம்தள்ளவில்லை. மக்களின் பிரதிநிதிகள் என்னும் வகையில் அவர்களுடன் இராஜதந்திர தொடர்புகளை பேணிவந்தது. அதேபோன்று, கூட்டமைப்புக்கு எதிர்நிலையிலுள்ளவர்களுக்கும் ஓர் இடத்தை வழங்கியிருந்தது.


ஆனால், 2009இற்குப் பின்னர் புதுடில்லி, கூட்டமைப்புடன் மட்டுமே இராஜதந்திரத் தொடர்புகளை பேணிவந்தது. இந்தக் காலத்தில் கஜேந்திரகுமார், பின்னர் சுரேஷ் - விக்னேஸ்வரன் கூட்டணி ஆகியவை தங்களை மாற்று அணியாகக் காண்பிக்கின்ற போதிலும்கூட, அவர்களுக்கான அங்கீகாரத்தை இதுவரையில் இந்தியா வழங்கியதாகத் தெரியவில்லை. ஒருவேளை எதிர்காலத்தில் வழங்கலாம்.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால், தேர்தலில் கூட்டமைப்பு பின்னடைவுகளை சந்தித்திருக்கின்றபோதிலும்கூட, தமிழ் மக்களின் பிரதான தலைமையாக கூட்டமைப்பை மட்டுமே இந்தியா கருதுவதாகத் தெரிகின்றது. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் டோவல் தனது விஜயத்தின்போது சம்பந்தனை சந்தித்துச் சென்றிருக்கின்றார். இதன்போது அவர் சம்பந்தனிடம் என்ன பேசினார் என்பது தொடர்பில் தகவல்கள் இல்லாத போதிலும்கூட, டோவல், வடக்கு - கிழக்கின் அபிவிருத்தியில் கூட்டமைப்பு கூடுதல் கவனம் செலுத்தவேண்டுமென்று கூறினார் என்று ஒரு தகவலை சிலர் முன்வைக்க முயற்சிக்கின்றனர். இதன்மூலம் இந்தியா, அரசாங்கத்தோடு கூட்டமைப்பை ஒத்துழைக்குமாறு கூறுவதாகவும் ஒரு கருத்துருவாக்கத்தை சிலர் மேற்கொள்ள முயற்சிக்கின்றனர். இதன்மூலம் இந்தியாவை பெரியளவில் நம்பிப் பயனில்லை என்பதே அவர்களின் வாதம்.

டோவல், அடிப்படையில் பாதுகாப்பு விடயங்கள் தொடர்பான ஒருவர். அவரைப் போன்றவர் சம்பந்தனுடன் பேசுவதற்கு என்ன இருக்கின்றது? மேலும், சம்பந்தனால் வடக்கு - கிழக்கில் எதனையும் செய்யமுடியாது என்பதும் 'சௌத் புளொக்'கிற்கு நன்கு தெரிந்த சங்கதி. மேலும், சம்பந்தன் அவர் சார்ந்த தமிழ் அரசு கட்சிக்குள்ளேயே செல்வாக்கு இழந்த ஒருவராகவே இருக்கின்றார். இந்த நிலையில் சம்பந்தனால் இந்தியாவின் எந்தவொரு விடயத்தையும் கையாளமுடியாது. அவ்வாறாயின், பின்னர் எதற்காக டோவல், சம்பந்தனை சந்திக்க வேண்டும்? உண்மையில், டோவல் சம்பந்தனை சந்தித்தமையானது, ஒரு குறியீட்டு அரசியல் பெறுமதியுடைய ஒன்று.

அதாவது, கொழும்பில் ஆட்சியாளர்களைச் சந்தித்த டோவல், அதற்கு சமதையாக தமிழர் தரப்பையும் சந்தித்து இந்தியாவின் கரிசனைகளை வெளிப்படுத்தியிருக்கின்றார். இதன்மூலம் இலங்கையின் தமிழர் பிரச்னையில் இந்தியா அக்கறையுடன் இருக்கின்றது. இதனை கொழும்பு புரிந்துகொள்ளவேண்டும். இதுதான் டோவல் - சம்பந்தன் சந்திப்பின் செய்தி. இதற்கப்பால் இதற்கு வர்ணம் பூச முற்படுவதானது, அவரவர் சொந்த விருப்பங்களாகும். வடக்கு - கிழக்கு அபிவிருத்தி விடயத்தில் தமிழர்களை ஒரு பொருட்டாகவே மதிக்காத கோட்டாபய அரசாங்கத்துடன் கூட்டமைப்பால் எவ்வாறு ஒத்துழைக்கமுடியும்? அவ்வாறு ஒத்துழைக்குமாறு இந்தியா எவ்வாறு கூட்டமைப்பைக் கோரமுடியும்?

# சாணக்கியம்!



**அரசியலில் சாணக்கியம் என்பது இராஜதந்திரத்தை குறிக்கின்றது. இந்தவகையில், மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தனது மும்மொழி வாதத்திறமையோடு வடக்கு – கிழக்கில் தற்போது இடம்பெற்றுவருகின்ற அத்துமீறல்களை மிகத்தெளிவாக நேற்று முன்தினம் பாராளுமன்றில் குறிப்பிட்டிருந்தார்.**

- அலசுவது இராஜதந்திரி -

*இராசமாணிக்கம் சாணக்கியனின் மும்மொழி வாதத்திறமை அனைவரையும் வியக்க வைத்ததோடு, முஸ்லிம் மக்களுக்கு சார்பாகவும் அவர் குரல் கொடுத்தமை அவரது பரந்துவிரிந்த கண்ணோட்டத்தையும் வெளிப்படுத்தியிருந்தது.*

*மட்டக்களப்பின் ஒரு பாரம்பரியம்மிக்க அரசியல் பின்னணியைக் கொண்டவரான இராசமாணிக்கம் சாணக்கியன், எவ்வித அச்சமோ கலக்கமோ இன்றி, துணிவாக தமது கருத்துக்களை முன்வைத்திருந்தார். வடக்கு-கிழக்கு தமிழர்களின் எதிர்கால சந்ததியைப் பொறுத்தவரை பழையன கழிந்து புதியன உருப்பெறவேண்டியதே காலத்தின் தேவையாகின்றது.*

**அரசியல் தந்திரம்**

*சிறுபான்மை இன மக்களை விரோதிகளாக காட்டி அரசியல் நடத்துவதையே தென்னிலங்கையின் எந்தவோர் அரசியல் கட்சியும் கையாண்டுவருகின்ற அரசியல் தந்திரமாக இருக்கின்றது.*

*மும்மொழிகளிலும் தமது வித்துவத்தை வெளிப்படுத்தி உரையாற்றியதன் மூலம் சாணக்கியன் தன்னை ஒரு நடுநிலையான இலங்கையர் என்பதையும் எடுத்துக்காட்டியுள்ளார். முஸ்லிம் அரசியல்வாதிகளே பேசுவதற்கு தயங்கிய கொவிட்-19 ஜனாஸா நல்லடக்கம் தொடர்பாகவும் சாணக்கியன் ஆணித்தரமான முறையிலே உரையாற்றியிருந்தார். அத்துடன், தமிழரானபோதிலும் தாம் ஓர் இலங்கைப்பிரஜை என்பதை சீனாவின் இலங்கைமீதான ஆதிக்கம் குறித்து பேசியபோது எடுத்துக்காட்டியிருந்தார்.*

*தமிழ் தேசிய கூட்டமைப்பின் அனுபவம் மிக்க பாராளுமன்ற உறுப்பினர்களே யுத்தம் முடிவுற்று 11 ஆண்டுகள் கழிந்துள்ளபோதிலும் இதுவரை பல்வேறு அரசியல் மனிதாபிமான பிரச்னைகள் குறித்து மேலோட்டமாகப்பேசிவந்தனரே தவிர, எதனையும் ஆணித்தரமாக குறிப்பிட்டிருக்கவில்லை.*

**நம்பிக்கை நட்சத்திரம்**

*இந்நிலையில், சாணக்கியன் எதிர்கால தமிழ் அரசியல் சந்ததியினரைப் பொறுத்தவரை ஒரு நம்பிக்கை நட்சத்திரமாக திகழ்கிறார். கடந்தகால தமிழ் அரசியல் வாதிகளைப் பொறுத்தவரை, உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பேசும் போக்கே பெரிதும் காணப்பட்டிருந்தது. ஆனால், இத்தகைய போக்கினால் தமிழர்கள் தமது தலையில் தாமே மண்ணை வாரிப்போட்ட நிலையே காணப்பட்டிருந்தது. ஆனால், சாணக்கியனின் கருத்துக் கண்ணோட்டங்களைப் பார்க்கும்போது அவர் குறிப்பிட்டவை மிகவும் தெளிவானவையாகவும், தென்னிலங்கை மக்களுக்கு நல்ல விளக்கத்தைக் கொடுப்பதாகவும் அமைந்திருந்தன.*

*இன்றைய ஆட்சியாளர்களைப் பொறுத்தவரை 2009ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக பெற்றுக்கொண்ட இராணுவ ரீதியான வெற்றியை மேலோங்க வைத்து அரசியல் நடத்துகின்ற தன்மையே காணப்படுகின்றது. மறுபுறத்தே, வடக்கு-கிழக்கில் அரசியல் தீர்வுக்கோ அல்லது மனிதாபிமான பிரச்னைகளுக்கோ உரிய தீர்வுகளை கண்டிராத நிலைதான் காணப்படுகின்றது.*


**46ஆவது கூட்டத்தொடர்**

*ஐக்கிய நாடுகள் ஸ்தாபன மனித உரிமை பேரவையின் 46ஆவது கூட்டத்தொடர் ஜெனிவாவில் அடுத்த மார்ச் மாதம் நடைபெறவுள்ளது. அச்சமயம் ஏற்கனவே இரு தடவைகள் ஒத்திவைக்கப்பட்ட இலங்கை தொடர்பான பிரேரணையும் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. இத்தருணத்தில் புதிய பிரேரணையின் அவசியம் பற்றியும் பிரஸ்தாபிக்கப்படுகின்ற நிலையில், சாணக்கியனின் கருத்துக்கள் வடக்கு-கிழக்கு பிரதேசங்களில் நிலவுகின்ற அத்துமீறல்கள், அநீதிகள் என்பவற்றை தெளிவாக படம் பிடித்துக் காட்டுவதாக இருக்கின்றன.*

*இராசமாணிக்கம் சாணக்கியனின் கல்விப் பின்னணி கண்டி திரித்துவக் கல்லூரியை மையப்படுத்தியிருக்கின்றது. இலங்கைக்கு முதல் முறையாக ஒலிம்பிக் வெள்ளிப் பதக்கத்தை பெற்றுத்தந்த பறங்கிய இனத்தவரான டங்கன் வைற் மற்றும் இலங்கையின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோர் மட்டுமல்ல.*

(02ஆம் பக்கம் பார்க்க)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



## சிங்களவருக்கு எதிராக உரை:

# தமிழ் அரசியல்வாதிகள் பாராளுமன்றம் வருவதற்குத் தடை விதிக்க வேண்டும்!

## அமைச்சர் சரத் வீரசேகர



கொழும்பு, டிசெ. 07

**‘சிங்களவர்களுக்கு எதிராக வெறுப்பை வெளிப்படுத்தும் உரைகளை நிகழ்த்தும் தமிழ் அரசியல்வாதிகள் பாராளுமன்றத்திற்கு வருவதை தடை செய்யவேண்டும்”,**

- இவ்வாறு வார இதழ் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்திருக்கிறார் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர.

மேலும், ‘ போர் முடிந்தபோது மஹிந்த ராஜபக்ஷ தவறிழைத்து விட்டார். அவர் தமிழ் அரசியல்வாதிகள் குறித்து அனுதாபம் கொண்டிருந்தார். அவர்களை மன்னித்தார். தற்போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அதனை சாதகமாக பயன்படுத்துகின்றது.

ஹிட்லர் தோற்கடிக்கப்பட்டவேளை நாஜி அரசியல் கட்சி முற்றாக அழிக்கப்பட்டது போல், பொட் கொல்லப்பட்டதை தொடர்ந்து அவரின் கெமரூஜ் கட்சி காணாமல் போய் விட்டது. சதாம் ஹூசைன் கொல்லப்பட்டமையைத் தொடர்ந்து அவரது பாத் கட்சி அழிக்கப்பட்டது, ஹொஸ்னி முபாராக் ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டதை தொடர்ந்து அவரது தேசிய ஜனநாயக கட்சி தடை செய்யப்பட்டது. இதுவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் நேர்ந்திருக்க வேண்டும்.

கடந்தகாலங்களில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர்கள் விடுதலைப் புலிகளின் தலைவரின் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்த பின்னரே பாராளுமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்தார்கள்.

விடுதலைப் புலிகளின் பிடியிலிருந்தவர்கள் உட்பட எங்கள் படையினரை கொலை செய்த பண்டிதரின் வீட்டிற்கு சென்று சுமந்திரன் மாவீரர் தினத்தை அனுஸ்டிக்கின்றார் அவருக்கு புகழாரம் சூட்டுகின்றார். தனது பாதுகாப்பிற்கு அளிக்கபபட்ட விசேட அதிரடிப்படையினரை தனது வீட்டின் வெளியே வைத்துக்கொண்டே எங்கள் பாதுகாப்பு படையினரின் கொலையாளிக்கு அஞ்சலி செலுத்தும் தைரியம் சுமந்திரனுக்கு உள்ளது.

அதன் பின்னர் அவர் பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு தனக்கான சிறப்புரிமைகள் குறித்து பேசுகின்றார். சிங்களவர்களிற்கு எதிரான வெறுப்புணர்வை வெளிப்படுத்தும் உரைகளை நிகழ்த்தும் தமிழ் அரசியல்வாதிகள் நாடாளுமன்றத்திற்கு வருவதை தடை செய்யவேண்டும்”, என்றும் கூறினார்.




**மேடம்**
கனவுகள் நனவாகும். இழந்திருந்த நிம்மதி மீளும். தாழ்வு மனப்பான்மை வேண்டாம். சொத்துக்கள் வாங்குவது பற்றித் திட்டங்களை தீட்டுவீர்கள்.

**இடபம்**
பயம் தீரும். பணியாளர்களுக்கு அலட்சியம் வேண்டாம். நண்பரிடம் ஆலோசனை பெறுவீர்கள். முயற்சியில் வெற்றி உண்டு. மனதில் மகிழ்ச்சி.

**மிதுனம்**
பிள்ளைகளின் திருமணம் குறித்து நல்ல முடிவு வரும். தந்தையின் தேவையை நிறைவேற்றி ஆசி பெறுவீர்கள். ஆதாயம் உண்டு.

**கடகம்**
நண்பர்களால் எதிர்பாராத நன்மை ஒன்றை அடைவீர்கள். உறவினர்களால் ஏற்பட்டிருந்த தொல்லை ஒன்று நீங்கும். மன நிறைவு ஏற்படும்.

**சிங்கம்**
நண்பர்களிடம் உதவி கிடைப்பதால் மகிழ்வீர்கள். சுப நிகழ்ச்சிக்கு உறவினர் ஒத்துழைப்பு கிடைக்கும். அலுவலகத்தில் பெயர் எடுப்பீர்கள்.

**கன்னி**
உடல்நலம் சீராகி மகிழ்ச்சி. கவலை நீங்கும். அலுவலக நண்பர்கள் இணைந்து செயல்பட முன்வருவார்கள். சகோதரர்கள் உதவி. தடைகள் அகலும்.

**துலாம்**
சொத்துக்கள் வாங்குவதில் இருந்த கவலைகள் நீங்கும். துணிந்து முடிவுகளை எடுத்து வளத்தைக் காண்பீர்கள். மாற்றங்கள் வரும். பலன் கிடைக்கும்.

**விருட்சிகம்**
மாமன், மைத்துனரிடம் ஏற்பட்ட மனக்கசப்பு மாறும். உறவினர் ஆதரவு கிடைக்கும். பிள்ளைகளின் வளர்ச்சிக்காக எடுத்த முயற்சிகள் வெற்றி தரும்.

**தனுசு**
எதிர்பார்த்த சுப நிகழ்வு ஏற்பாடாகும். சலுகைகளைக் கொடுக்க மேலதிகாரிகள் முன்வருவர். பிரச்னையிலிருந்து விடுபடுவீர்கள். திருப்பங்கள் உண்டு.

**மகரம்**
சில பிரச்னையில் தலையிடுவதால் தொல்லை. வீண் பழிச்சொல் ஏற்படுவதைத் தவிருங்கள். குடும்பத்தினரிடம் அனுசரித்து செல்வது நல்லது.

**கும்பம்**
பயணம் செல்ல நேரிடலாம். பணவரவு திருப்தி. மேலதிகாரியிடம் நல்ல அணுகுமுறை இருக்கும். மகிழ்ச்சியான சூழ்நிலை, சுப நிகழ்ச்சி உண்டு.

**மீனம்**
உடல் நலம் மேம்படும். யாரிடமும் கருத்து வேற்றுமை ஏற்படாமல் சமாளிப்பீர்கள். வாழ்க்கை துணையின் உடல்நலனில் அக்கறை கொள்வீர்கள்.



# நீர்த்தேக்கம் பார்க்கச் சென்ற இளைஞர் சடலமாக மீட்பு!

வவுனியா, டிசெ. 07

மழையால் நிறைந்து வழிந்த நீர்த்தேக்கத்தை பார்க்கச் சென்று நீரில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல் போன இளைஞர் நேற்று சடலமாக மீட்கப்பட்டார்.

வவுனியா புதுக்குளத்தில் உள்ள நீர்த்தேக்கத்தைப் பார்க்கச் சென்ற தி.தனுசன் (வயது 18) என்ற இளைஞரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

அண்மையில் வடக்கில் பெய்த கனமழையின் காரணமாக வவுனியா புதுக்குளத்தில் அமைந்துள்ள நீர்தேக்கம் நிரம்பியதுடன் மேலதிக நீர் சுருங்கை வழியாக வெளியேறி வருகின்றது. இதனைப் பார்வையிட அதிகளவானோர் சென்றனர்.

இவ்வாறு, கடந்த வெள்ளிக்கிழமை அங்கு சென்ற தனுசன் என்ற இளைஞர் சுருங்கைக்குள் இறங்கினார். அச்சமயம் நீரால் அடித்துச்செல்லப்பட்டார். இதை அவதானித்த அவரின் நண்பர்கள் அவரை மீகட்க முயன்றபோதும் முடியவில்லை. நீரில் அடித்துச் செல்லப்பட்டவரை பல கட்டங்களாகத் தேடினர்.

தேடுதல் முயற்சி தோல்வியடைந்த நிலையில், காணாமல் போன இளைஞன் நேற்று முற்பகல் நீர்த்தேக்கத்திலிருந்து சுமார் 50 மீற்றர் தொலைவில் சடலமாக மீட்கப்பட்டார்.

# குரங்குக்கு பி.சி.ஆர்.!

கண்டி, டிசெ. 07

கண்டி நகரை அண்மித்த உடவத்தை காட்டில் உயிரிழந்த குரங்கு ஒன்றுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

அந்தக் காட்டில் பல குரங்குகள் திடீரென உயிரிழந்தன. இதையடுத்து அவற்றுக்கும் கொரோனா தொற்றியிருக்கலாம் என்ற அச்சத்தில் இறந்த குரங்கு ஒன்றுக்கு பி.சி.ஆர். பரிசோதனை நடத்தப்பட்டது.

ஆனால், அந்தக் குரங்குகளின் உடலில் விஷம் பரவியதாலேயே உயிரிழந்தன என்று தெரிய வந்தது. இது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.



# நெடுந்தீவு மீனவரின் படகு மன்னாரில் கரை ஒதுங்கியது

மன்னார், டிசெ. 07

புரேவி புயலால் அடித்துச் செல்லப்பட்ட மீன்பிடிப் படகு ஒன்று தலைமன்னார் பியர் கடற்பரப்பில் கரையொதுங்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

தலைமன்னார் பியர் கடற்பரப்பில் மூழ்கிய நிலையில் கரையொதுங்கிய கண்ணாடியிழை படகு ஒன்று நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை மீனவர்களால் மீட்கப்பட்டது.

அவர்கள் பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில், OFRP - A - 6204 JAF என்ற பதிவிலக்கமுடைய குறித்த படகில் ‘அமுத விஜிஸ்ரெபானி’ எனும் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. பதிவிலக்கத்தின் அடிப்படையில், அந்தப் படகின் உரிமையாளர் யாழ். மாவட்டத்தை சேர்ந்தவருடையது என்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்தே குறித்த படகு நெடுந்தீவை சேர்ந்த மீனவருக்கு சொந்தமானது என்றும், அந்தப் படகு காணாமல் போனது குறித்து அவர் முறைப்பாடு செய்திருந்தார் என்பதும் தெரிய வந்தது.

மன்னார் கரையோர இராணுவ சோதனைச் சாவடியில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள படகு தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் நடத்தி வருகின்றனர். அத்துடன் அந்தப் படகை உரிமையாளரிடம் ஒப்படைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# சுற்றுச்சூழல் அமைச்சின் செயலராக மருத்துவர் அனில் ஜாசிங்க நியமனம்

## பாராளுமன்ற பேரவை நேற்று அனுமதி

கொழும்பு, டிசெ. 07

சுற்றுச்சூழல் அமைச்சின் செயலாளராக மருத்துவர் அனில் ஜாசிங்கவை நியமிக்க உயர் பதவிகள் குழு ஒப்புதல் அளித்துள்ளது.

நான்கு அமைச்சுக்களின் செயலர்கள், ஒரு தூதுவர் பதவிகளுக்க பாராளுமன்றப் பேரவை நேற்று ஒப்புதல் அளித்தது.

இதன்படி, கலாநிதி பிரியத் பந்து விக்ரம நீர்வழங்கல் அமைச்சின் செயலராகவும், பேராசிரியர் கபில பெரேரா உயர் கல்வி அமைச்சின் செயலராகவும், எம்.எம்.பி.கே. மாயதுன்னை நீதி அமைச்சின் செயலராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கட்டார் நாட்டுக்கான தூதுவராக எம்.எம். மொஹமட் நியமிக்கப்பட்டுள்ளார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபே வர்த்தன தலைமையிலான பாராளுமன்ற உயர் பதவிகள்குழு நேற்றுக்கூடி இதற்கான அனுமதியை வழங்கியது.

# வெளிநாட்டினரின் பணத்துக்காகவே தமிழ் எம்.பிக்கள் செயல்படுகின்றனர்

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க சாடல்



**கொழும்பு, டிசெ.07**

**தமிழ்த் தலைவர்கள் அன்று யுத்தத்தை வைத்துப் பிழைப்பு நடத்தினர். தற்போதும் இங்கு உரையாற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் நாடு கடந்து வாழ்பவர்களின் பணத்துக்காகவும் அவர்களின் நோக்கத்துக்காகவுமே செயல்படுகின்றனர் என்று சாடியுள்ளார் சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க.**

நேற்றுமுன்தினம் பாராளுமன்றிலேயே இந்தக் குற்றச்சாட்டை அவர் முன்வைத்தார். அத்துடன், சிங்கள, தமிழ், முஸ்லிம் என அனைவரும் ஒற்றுமையாக வாழ முன்வரவேண்டும். அதற்கான சூழல் இருக்கின்றது என்றும் சொன்னார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: -

மேலும், சுற்றுலாத்துறையின் மூலம் 2025 ஆம் ஆண்டாகும்போது தேசிய வருமானத்துக்கு ஆயிரம் கோடி டொலர்களை ஈட்டுவதே அரசாங்கத்தின் இலக்கு. அதற்கான வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டபோதும் கொவிட் காரணமாக ஓரளவு பின்னடைவை ஏற்படுத்தி இருக்கின்றது.

கடந்த மார்ச் மாதத்தில் எமது நாட்டுக்கு 5 இலட்சத்து 7ஆயிரத்து 311 சுற்றுலா பயணிகள் வந்துள்ளனர். இது தொடர்ந்திருந்தால், வருடத்துக்கு 7 இலட்சம் சுற்றுலா பயணிகளை கொண்டுவரும் எமது இலக்கை அடைந்திருக்க முடியும். என்றாலும் கொரோனா காரணமாக பாதிக்கப்பட்டிருக்கின்றது. அத்துடன் எமது நாடு சுற்றுலாத்துறைக்கு மிகவும் கவர்ச்சிகரமான நாடாகும். என்றாலும் 30 வருடகால பயங்கரவாத யுத்தம் காரணமாக நாங்கள் 30 வருடம் பின்னுக்கு சென்றோம். சுற்றுலாத்துறை வீழ்ச்சியடைந்திருந்தது என்று கூறினார்.

## யாழ்.மாவட்டத்திற்கு விளையாட்டு பேரவை!

யாழ்ப்பாணம், டிசெ. 07

யாழ். மாவட்டத்தில் விரைவில் விளையாட்டுப்பேரவை ஒன்று உருவாக்கப்படும் என்று வடக்கு மாகாண உடற்கல்வி டிப்ளோமா சங்கத் தலைவரும் - விளையாட்டுத்துறை ஆலோசகருமான ப.தர்மகுமாரன் தெரிவித்துள்ளார்.

முதல்கட்டமாக யாழ். மாவட்டத்திலும் பின்னர், வடக்கின் ஏனைய மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்படும்.

விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் வழிகாட்டுதலின்படி இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது என்றும், விரைவில் மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரிகள், விருதுபெற்ற வீரர்கள், பயிற்றுவிப்பாளர்கள், மாவட்ட விளையாட்டுச்சங்கங்கள், விளையாட்டுப் பணிப்பாளர்கள் ஆகியோரை உள்ளடக்கி இந்தப் பேரவை அமைக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

## வெள்ளத்தில் சிக்கி கால்நடைகள் பலி

மன்னார், டிசெ. 07

புரேவி புயலால் பெய்த கடும் மழை காரணமாக மன்னாரில் மேய்ச்சலுக்கு சென்ற பல கால்நடைகள் பலியாகின என்று தெரிய வருகின்றது.

பெரியமடு குளத்தை அண்டிய பகுதியில் மேய்ச்சலுக்காக சென்ற நிலையில் பெய்த கன மழையால் ஏற்பட்ட வெள்ளத்தால் பல மாடுகள் நீரில் அடித்துச் செல்லப்பட்டன. அவற்றில் பல இறந்துள்ளன என்று தெரிய வருகின்றது.

இந்த விடயம் தொடர்பில் மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு மற்றும் பிரதேச செயலகம் உறுதிப்படுத்தியதை தொடர்ந்து பெரிய மடுப் பகுதியில் காணாமல்போன கால் நடைகளை மீட்கும் பணிகளை கடற்படை, இராணுவம் மற்றும் பொது மக்களின் பக்களிப்புடன் நேற்றுமுன்தினம் ஈடுபட்டனர்.

இதன்போது பல மாடுகளின் உடலங்கள் மீட்கப்பட்டன. இதேநேரத்தில் காணாமல்போன மாடுகளை தேடும் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன.

## நாட்டில் 6 மாவட்டங்களில் தனிமைப்படுத்தல் வலயங்கள்!

கொழும்பு, டிசெ. 07

நாட்டில் நேற்றையதினம் கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, புத்தளம், அம்பாறை மாவட்டங்களில் தனிமைப்படுத்தல் வலயங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதில் சில பிரதேசங்கள் தொடர்ந்தும் தனிமைப்படுத்தல் வலயங்களாக உள்ளன. புதிய அறிவிப்பின்படி 14 பொலிஸ் நிலையப் பிரிவுகளும், 19 கிராம சேவகர் பிரிவுகளும் 4 தொடர் மாடி வீடுகளும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

கொழும்பு மாவட்டத்தில், முத்வல், புளூமெண்டல், கிராண்ட்பாஸ், டாம் வீதி, தெமட்டகொடை, கெசல்வத்தை, மாளிகாவத்தை, மருதானை, கொட்டாஞ்சேனை 10 பொலிஸ் நிலையப் பகுதிகளும் வெகந்தை, வனதாமுல்லை, சலமுல், விஜயபுரம் கிராம சேவகர் பிரிவுகளும் ரந்திய உதன, லக்ஷந்த செவன, தெற்கு பெர்குஷன், வெள்ளவத்தை கோகிலா வீதி தொடர் மாடி வீடுகளும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

கம்பஹா மாவட்டத்தில், வத்தளை, பேலியகொடை, களனி பொலிஸ் நிலையப் பகுதிகளும், தலத்துவ வீதி தொழிலாளர் வீட்டுப் பகுதியும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. களுத்துறை மாவட்டத்தில் அளுத்கம கிழக்கு, அளுத்கம மேற்கு, எபிட்னமுல்லை, பொகவத்தை, கொரவளை, கல்கெமண்டிய, பமுனுமுல்லை கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தல் பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

கண்டி மாவட்டத்தில், புளுகஹதென்ன, தெலம்புகஹ தோட்டம், போகம்பரை கிராம சேவகர் பிரிவுகளும், புத்தளம் மாவட்டத்தில், வேரலபாதை, வேரலபாதை தெற்கு, வேரலபாதை வடக்கு, எகோதவத்தை, குருஷ பதுவை கிராம சேவகர் பிரிவுகளும், அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் பகுதியும் தனிமைப்படுத்தல் வலயங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

## கிளிநொச்சி பொதுநூலகம் அமைக்க ஆலோசனை குழு!

கிளிநொச்சி, டிசெ. 07

கிளிநொச்சியில் பொது நூலகம் அமைப்பதற்கான ஆலோசனைக்குழு நேற்றுமுன்தினம் கரைச்சி பிரதேசசபையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.



கரைச்சி பிரதேச சபையால் 2021 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப் படவுள்ள பொது நூலகம் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போதே ஆலோசனைக் குழு நியமிக்கப்பட்டது. இந்தக் குழுவில் முன்னாள் கல்வி அமைச்சரும் கிளிநொச்சி கல்வி வலய ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளருமான த.குருகுலராஜா பொறியியாளர் க.கடம்பசீலன், மருத்துவர்கள் மு.சிறீதர், குகராஜா, யோ. கௌதமன், திருலோகமூர்த்தி, சட்டத்தரணி ச. விஜயராணி, அதிபர்களான பூலோகராஜா, கணேசன், ஜோயல் பியசீலன், சூரியகுமாரி, ஓய்வுநிலை அதிபர் இராஜேந்திரன் ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் விந்தன், விளையாட்டு உத்தியோகத்தர் ஆனந்தராஜா, கிளிநொச்சி வர்த்தக சங்கத்தின் தலைவர் விஜயசிங்கம் மற்றும் ஊடகவியலாளர் மு.விவேக், கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினர்கள் சத்தியானந்தன், தயாபரன், ஜீவராசா, பதவி வழியில் தவிசாளர் மற்றும் உபதவிசாளர் ஆகியோரும் ஆசிரியர் கனகலிங்கம், தனியார் கல்வி நிலையங்களின் ஒன்றியத்தின் தலைவர் நகுலேஸ்வரன் ஆகியோர் இந்தக் குழுவில் அங்கம் வகிக்கிறார்கள்.

## பருத்தித்துறையில் முதியவர் மரணம்: பி.சி.ஆர். சோதனை நடத்த முடிவு

யாழ்ப்பாணம், டிசெ. 07

பருத்தித்துறையை சேர்ந்த முதியவர் ஒருவர் நேற்று திடீரென உயிரிழந்தார்.

அவருக்கு கொரோனா தொற்று இருக்கலாம் என்ற சந்தேகத்தில் பி.சி.ஆர். பரிசோதனை நடத்த முடிவு செய்யப்பட்டதாக வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த விடயம் குறித்து மேலும் அறிய வருவதாவது:

பருத்தித்துறை - புலோலியில் வசித்து வந்த முதியவர் ஒருவருக்கு நேற்று முன்தினம் இரவு திடீர் நெஞ்சுவலி ஏற்பட்டது. இதையடுத்து பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார். இந்நிலையில் அவர் நேற்று உயி ரிழந்தார்.

உயிரிழந்தவரின் மகள் கொழும்பில் மருத்துவபீடத்தில் பயின்று வருகின்றார். அவருடன் பழகிய ஒருவருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது.

இதனால், கொழும்பில் 14 நாட்கள் சுயதனிமைப்படுத்தப்பட்ட அவருக்கு இரு தடவைகள் பி.சி.ஆர். பரிசோதனை நடத்தப்பட்டது. அதில் அவருக்கு தொற்று இல்லை என்பது உறுதியானது.

பின்னர், புலோலியிலுள்ள வீட்டுக்கு திரும்பிய அவர் 14 நாட்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். இந்நிலையிலேயே அவரின் தந்தை திடீரென உயிரிழந்தார். உயிரிழந்தவருக்கு நீண்ட நாட்களாக நீரிழிவு நோயின் தாக்கம் உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஈழநாடு Eelanadu
Online
சம்பவங்கள், செய்திகள் உடனுக்குடன் அறிந்துகொள்ள...
www.eelanadu.lk

# கொழும்பு துறைமுக கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு ஒருபோதும் கொடுக்கக்கூடாது

## திஸ்ஸ அத்தநாயக்க கோரிக்கை



கொழும்பு,டிசெ.07

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு கொடுத்து அபிவிருத்தி செய்ய அரசாங்கம் தயாராகியுள்ளது என்று அறிந்துகொள்ள முடிகின்றது. எனவே அந்தத் தவறை ஒருபோதும் செய்ய வேண்டாம் எனக் கேட்டுக்கொள்கின்றோம் என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சுக்கள், இராஜாங்க அமைச்சுக்களுக்கான நிதியொதுக்கீட்டு குழு நிலை விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்குக் கொடுத்து அபிவிருத்தி செய்ய அரசாங்கம் தயாராகியுள்ளது என அறிந்துகொள்ள முடிகின்றது. இதில் 49 வீதம் இந்தியாவுக்கும், 51 வீதம் இலங்கைக்கும் வழங்கப்படவுள்ளது எனக் கூறப்படுகிறது. தெற்கு முனையமும் 65 வீதம் இந்தியாவுக்கே வழங்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த அபிவிருத்திகளில் இலங்கைக்கு கிடைத்த இலாபம் ஒன்றுமே இல்லை. இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை இன்றும் நட்டத்தில் இயங்கிக் கொண்டுள்ளது. இந்நிலையில் துறைமுகங்களை வெளிநாடுகளுக்கு கொடுக்க வேண்டாம். குறிப்பாக கிழக்கு முனையம் இலங்கைக்கு கிடைத்துள்ள முக்கிய வளமாகும். அதனை இந்தியாவுக்கு வழங்க வேண்டாம்.

மேலும் துறைமுகத்தில் பணிபுரியும் ஊழியர்களில் 900 பேரளவில் கொரோனா வைரஸ் நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதனால் துறைமுகம் முடக்கப்பட்டுள்ளது. சர்வதேச கப்பல்கள் நெருக்கடிகளைச் சந்தித்துள்ளன. இதனால் இலங்கைக்கு வரும் கப்பல்கள் எண்ணிக்கை குறைவடையும் நிலைமை உருவாகியுள்ளது.

பிரதான சர்வதேச நிறுவனங்கள் இலங்கை வருவதைத் தவிர்த்துள்ளன. துறைமுகத்தின் கடன்கள் மாத்திரம் மொத்தக் கடன்களில் 24 வீதமாகும். இதிலிருந்து துறைமுகங்களை எவ்வாறு மீட்பது, அதற்கான வேலைத்திட்டம் என்ன என்பதை ஆராயவேண்டும். தற்காலிக வருமானங்களைக் கருத்தில் கொண்டு நீண்டகால நெருக்கடிகளை ஏற்படுத்த முடியாது. இப்போதும்கூட துறைமுகத் தில் வரும் வருமானத்தில் சூரிய வெவ கிரிக்கெட் மைதானத்தைப் புனரமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இது பாரிய நிதி மோசடி- என்றார். (எ)

# மதுபானங்களுக்கு வைப்புக் கட்டணம்

## சுற்றாடல் அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு,டிசெ.07

**கால் போத்தல் மதுபானங்களுக்கு வைப்புக்கட்டணம் அறவிட தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்தீர்மானத்தை நடைமுறைப்படுத்த மதுபான உற்பத்தி நிறுவனங்கள் முன்வராத பட்சத்தில் கட்டாயம் கால் போத்தலை தடை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.**

மதுபான விற்பனை நிலையங்களில் போத்தல்களை விற்பனை செய்யும்போது வைப்பீட்டு கட்டணம் அறவிடுவது தொடர்பில் சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீரவின் தலைமையில் மதுபான தயாரிப்பு நிறுவனம் மற்றும் கலால் திணைக்கள அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

கால் போத்தல் மதுபான பாவனை மூலம் சூழல் மாசடைந்திருப்பதாக சூழல் ஆர்வலர்கள் மற்றும் நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இந்நிலையில் கால் போத்தல் மதுபானத்துக்கு வைப்புக் கட்டணம் அறவிடத் தீர்மானிக்கப்பட்டது.



கால் போத்தல் மதுபானத்துக்காகப் பெறப்படுகின்ற வைப்புக் கட்டணம் வாடிக்கையாளர்கள் அந்தக் கட்டணத்தை மீண்டும் பெறத்தூண்டும் வகையிலான கட்டணமாக இருக்கவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

பெற்றுக்கொள்ளப்படும் வைப்புக் கட்டணம் எவ்வளவு என்பது சம்பந்தமாக இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. அது தொடர்பில் சுற்றாடல் அமைச்சு, கலால் திணைக்களத்துடன் கலந்துரையாடி தீர்மானம் மேற்கொள்ளவுள்ளது- என்றார்.

நாட்டில் வருடாந்த போத்தல் உற்பத்தியானது 120 மில்லியனாவதுடன் அவற்றில் 18 - 20 மில்லியனுக்கும் இடைப்பட்ட அளவு போத்தல்கள் மதுபானத்துக்குப் பயன்படுத்தப்படுகிறது. இவற்றுள் 60 வீதத்துக்கும் மேற்பட்டவை மீள் சுழற்சி செய்யமுடியாதவை என சுற்றாடல் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (எ)




# மனிதவுரிமை மீறப்படும் நாட்டுக்கு சுற்றுலாப் பயணிகள் வருவதில்லை

## மனுஷ நாணயக்கார தெரிவிப்பு



கொழும்பு,டிசெ.07

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டிருக்கும் சுற்றுலாத்துறையைச் சேர்ந்தவர்களுக்கு அரசாங்கத்தால் எந்த நிவாரணமும் இல்லை. மஹர சிறைச்சாலை கலவரமும் சுற்றுலாத்துறைக்குப் பாதிப்பாகும் என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

சுற்றுலாத்துறையை உயர்ந்த நிலைக்குக் கொண்டுசெல்ல மனித உரிமை முக்கியமாகும். அதனை எமது அரசாங்கம் செய்திருந்தது. அதனால்தான் எமது சுற்றுலாத் துறை சர்வதேச மட்டத்தில் உயர்ந்த நிலைக்கு வந்தது. உயிர்த்த ஞாயிறு தாக்குதலால் சுற்றுலாத்துறை பாரியளவில் பாதிக்கப்பட்டது. என்றாலும் குறுகிய காலத்தில் சுற்றுலாத்துறையைப் பழைய நிலைக்கு கொண்டுவர முடிந்தது.

மேலும் கொரோனா தொற்றால் தற்போது சுற்றுலாத்துறை பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் சுற்றுலாத்துறையுடன் சம்பந்தப்பட்ட சிறிய வியாபாரிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். சுற்றுலாப் பயணிகளை வாகனங்களில் ஏற்றிச்சென்றவர்கள் வாகனங்களின் லீசிங் செலுத்த முடியாமல் பாதிக்கப்பட்டுள்ளனர். அதனால் அவர்கள் தங்களது வாகனங்களில் தற்போது தேங்காய் விற்பனை செய்கின்றனர். ஆனால் அரசாங்கம் அவர்களுக்கு எந்த வித நிவாரணத்தையும் வழங்கவில்லை.

கொரோனா அச்சுறுத்தல் வந்த ஆரம்பத்திலே ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் விமான நிலையத்தை மூடுமாறு எதிர்க்கட்சித் தலைவர் பாராளுமன்றில் தெரிவித்தார். ஆனால் அரசாங்கம் அதனை விமர்சித்து வந்தது. அன்று விமான நிலையத்தை மூடியிருந்தால் இந்தளவு பாதிப்பு நாட்டுக்கு வந்திருக்காது. அதே போன்று மஹர சிறைச்சாலையில் இடம்பெற்ற கலவரத்தால் சுற்றுலாத்துறைக்குப் பாதிப்பு ஏற்படும். மனித உரிமை மீறப் படும் நாட்டுக்கு சுற்றுலாப் பயணிகள் வருவதில்லை- என்றார். (எ)

# நடிகர் விஜயின் சொத்துக்களை சுவீகரித்ததா அரசாங்கம்?

சென்னை, டிசெ. 07

தமிழ் திரையுலகின் உச்ச நட்சத்திர நடிகரான விஜய்க்கு சொந்தமாக இலங்கையில் உள்ள சொத்துகள் சுவீகரிக்கப்பட்டதாக வெளியாகும் செய்திகள் குறித்து விஜய் தரப்பில் பதிலளிக்கப்பட்டுள்ளது.

இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட தமிழ்ப் பெண்ணான சங்கீதாவையே இளைய தளபதி விஜய் திருமணம் செய்திருந்தார். அந்த வகையில் இலங்கையில் பல சொத்துகள் இளைய தளபதி விஜய் குடும்பத்தின் பெயரில் ஏறங்கனவே வாங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் அந்தச் சொத்துகளை இலங்கை அரசாங்கம் சுவீகரித்துள்ளதாக தகவல்கள் இணைய வெளியில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி வருகின்றன.

இத்தகவலை நடிகர் விஜய் தரப்பு மறுத்திருப்பதாக இந்தியாவில் இருந்து வெளியாகும் ரைம்ஸ் ஒப் இந்தியா செய்தி வெளியிட்டுள்ளது.

## மன்னாரில் நாளை

# விசாலமான காற்றாலை மின் நிலையம் திறப்பு

மன்னார்,டிசெ.07

**மன்னாரில் நிர்மாணிக்கப்பட்ட இலங்கையின் விசால மான காற்றாலை மின் நிலையம் நாளை 8 ஆம் திகதி திறக்கப்படவுள்ளது என இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸநாயக்க தெரிவித்தார்.**



*பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது. மீள் புதுப்பிக்கத்தக்க வலு சக்தியின்பால் இலங்கை கவனம் செலுத்தியிருப்பது வெற்றியென இராஜாங்க அமைச்சர் சுட்டிக் காட்டியதுடன், காற்றாலை மின் உற்பத்தியானது சுற்றாடல் நேய மிக்கதெனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (எ)*



## 16 பேருக்கு கொரோனா உறுதி தண்டுகலா தோட்டம் முடக்கம்

*ஹற்றன்,டிசெ.07*

*ஹற்றன், நோட்டன்பிரிட்ஜ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தண்டுகலா தோட்டத்தின் மேல்பிரிவில் மேலும் 16 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.*

*இதனையடுத்து தண்டுகலா பகுதி முடக்கப்பட்டது. அப்பகுதியிலிருந்து எவரும் வெளியேற முடியாது என்பதுடன் வெளியிடங்களிலிருந்து அங்கு வருவதற்கு தடைவிதிக்கப்பட்டது.*

*அத்துடன், வட்டவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆக்ரோயா பகுதியிலும் கொரோனா தொற்றாளர்கள் இருவர் அடையாளம் காணப்பட்டனர்.*

*தண்டுகலா தோட்டத்தில் ஏற்கனவே 05 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். இதனையடுத்து அவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர்.*

*அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் நேற்று முன்தினம் வெளியாகின. இதில் 16 பேருக்கு வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.*

*இவர்களை கொரோனா தனிமைப்படுத்தல் சிகிச்சை நிலையங்களுக்கு கொண்டு செல்வதற்கு சுகாதார அதிகாரிகளால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

*கொழும்பில் தொழில் செய்த நிலையில் ஊர் திரும்பியவர்கள் மூலமே இவர்களுக்கு வைரஸ் தொற்றியது என சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர். (எ)*

## உத்தியோகத்தருக்கு கொரோனா களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையம் நேற்று மூடப்பட்டது

*மட்டக்களப்பு,டிசெ.07*

*மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளார் என கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் அ. லதாகரன் தெரிவித்தார்.*

*களுவாஞ்சிக்குடி ஆதார மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றபோது சந்தேகத்தின் அடிப்படையில் எடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை மூலம் இவருக்கு தொற்று உறிதிப்படுத்தப்பட்டது.*

*இதனையடுத்து களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டது.*

*இந்நிலையில் களுவாஞ்சிக்குடி ஆதார மருத்துவமனை வளாகம், அந்த பொலிஸ் உத்தியோகத்தர் சிகிச்சை பெற்று வந்த விடுதி என்பனவற்றில் கிருமித் தொற்று நீக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது என பொதுச்சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்தனர்.*

*இதேவேளை நேற்றுக் காலை வரை கிழக்கில் தொற்றாளர்கள் எண்ணிக்கை 338 ஆக அதிகரித்துள்ளது. (எ)*

## கொரோனாவால் உயிரிழப்பு நாட்டில் 137 ஆக அதிகரிப்பு

*கொழும்பு,டிசெ.07*

*நாட்டில் நேற்று முன்தினம் 669 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.*

*இதனால் இலங்கையில் பதிவான மொத்த கொரோனா தொற்றாளர்கள் எண்ணிக்கை 27 ஆயிரத்து 228 ஆக உயர்வடைந்தது என சுகாதார அமைச்சின் தேசிய தொற்று நோயியல் பிரவு தெரிவித்துள்ளது.*

*நேற்று முன்தினம் அடையாளம் காணப்பட்ட அனைத்து நோயாளர்களும் பேலியாகொடை - மினுவாங்கொடை கொத்தணிப் பரவலுடன் தொடர்புடையவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*அதற்கமைய மினுவாங்கொடை மற்றும் பேலியகொடை கொரோனா கொத்தணியில் சிக்கிய நோயாளர்கள் எண்ணிக்கை தற்போது 23 ஆயிரத்து 674 ஆக அதிகரித்தது.*

*கொரோனா தொற்றுக்குள்ளான 20 ஆயிரத்து 90 பேர் பூரண குணமடைந்து மருத்துவமனைகளை விட்டு வெளியேறிய நிலையில் 7 ஆயிரத்து 8 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.*

*அதேநேரம் கொரோனா தொற்று சந்தேகத்தின் பேரில் 475 பேர் மருத்துவ கண்காணிப்பில் உள்ளனர்.*

*இதுதவிர கொரோனா தொற்று காரணமாக ஏழு பேர் உயிரிழந்தனர் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் உறுதி செய்யப்பட்டது.*

*இதற்கமைய இலங்கையில் பதிவான கொரோனாவால் உயிரிழந்த நோயாளர்கள் எண்ணிக்கையும் 137 ஆக உயர்வடைந்தது.(எ)*

## மேலும் 298 இலங்கையர் நேற்று நாடு திரும்பினர்

*கொழும்பு,டிசெ.07*

*கொரோனா வைரஸ் பரவல் அச்சத்தால் வெளிநாடுகளில் சிக்கித் தவித்த மேலும் 298 இலங்கையர்கள் நேற்று அதிகாலை நாடு திரும்பினர்.*

*டுபாயிலிருந்து இரு விமானங்கள் மூலம் 169 பேரும், டோஹாவிலிருந்து 41 பேரும், சிட்னியிலிருந்து 38 பேரும், நரிட்டோவிலிருந்து 50 பேரும் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.*

*விமான நிலையத்தை வந்தடைந்த அனைத்துப் பயணகளும், கொழும்பிலுள்ள பல தனியார் மருத்துவமனை ஊழியர்களால் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன், தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக முகாம்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். (எ)*

## 30 பேருந்துகளின் அனுமதி இரத்து

### பொலிஸார் எச்சரிக்கை

*கொழும்பு,டிசெ.07*

*அரசாங்கம் பிறப்பித்த கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு சுகாதார பாதுகாப்பு ஆலோசனைகளைப் பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டின்பேரின் பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் 30 பேருந்துகளின் அனுமதி இரத்துச் செய்யப்பட்டது.*

*நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போதே இவ்வாறு பேருந்துகளின் போக்குவரத்து அனுமதி இரத்துச் செய்யப்பட்டது.*

*கொரோனா தடுப்பு வழிகாட்டுதல்களைக் கடைப்பிடிக்கத் தவறும் சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸார் எச்சரித்தனர். (எ)*







## மஹர சிறையில் அமைதியின்மை; 116 பேரிடம் வாக்குமூலம் பதிவு

*கொழும்பு,டிசெ.07*

*மஹர சிறைச்சாலையில் அண்மையில் ஏற்பட்ட அமைதியின்மை தொடர்பில் 116 பேரிடம் பெறப்பட்ட வாக்குமூலங்கள் அடிப்படையில் அறிக்கைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.*

*இந்த அமைதியின்மையின் போது உயிரிழந்த 11 கைதிகளில் 06 பேர் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.*

*இது தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.*

*11 சிறை அதிகாரிகள், இரண்டு மருத்துவர்கள் மற்றும் 25 கைதிகளிடம் இதுவரை வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. (எ)*

# இளையோர் 'ஒன் லைன்' ஊடகத்துக்கு தன் நேர்காணலை வழங்கிய மக்ரோன்!




பாரிஸ், டிசெ. 07

பிரதான ஊடகங்களை விட சமூக ஊடகங்களே இளைய தலைமுறையை ஈர்க்கிறது. அவர்களுக்குச் சேர வேண்டிய விடயங்களை அவற்றின் ஊடாக அணுகிச் சொல்ல வேண்டிய மாற்றத்துக்குரிய கால கட்டம் இது.

முழுக்க முழுக்க சமூகவலைத் தளங்கள் ஊடாக ஒளிபரப்பப் படும் 'ஒன் லைன்' வீடியோ மீடியா ஒன்றுக்குத் தனது நீண்ட நேர்காணலை வழங்கியிருக்கி றார் பிரெஞ்சு அதிபர் மக்ரோன்.

ருவீற்றர், முகநூல், ரிக்ரொக், யூரியூப் என முழுவதும் சமூக வலைத்தளங்களில் ஒளிபரப்பப் படுகின்ற 'புறு மீடியா' வில் (https://www.brut.media/fr) மக்ரோனின் செவ்வி நேற்று ஒளிபரப்பாகியது..

மக்ரோன் தனது செவ்வியின் இடையில் இளையவர்களுடன் "ஸ்னப் சற்"(Snapchat) மூலம் இணைந்து கொண்டு அவர்களது கேள்விகளுக்கும் பதிலளித்தார்.

பொலீஸ் விவகாரங்களை பிரதானமாகக் கொண்டிருந்த அந்த செவ்வியில் சுகாதாரம், பொருளாதாரம், உயர் கல்வி, சுற்றுச் சூழல், பிரிவினைவாதம், பெண்களின் பாதுகாப்பு என வேறு பல விடயங்கள் தொடர்பான தனது நிலைப் பாடுகளையும் அவர் வெளி யிட்டார்.

2016 இல் தொடங்கப் பட்ட "புறு மீடியா" பிரான் ஸில் இளையவர் மத்தியில் பெரும் செல்வாக்குச் செலுத் திவரும் ஒன் லைன் ஊட கம் ஆகும். ஆரம்பித்து மூன்று ஆண்டுகள் கடப் பதற்குள் கடந்த ஆண்டு ஒக்ரோபரில் புறு மீடியாவின் வீடியோக்கள் உலகெங்கும் அறுபதுக்கும் மேற்பட்ட நாடு களில் 1.1 பில்லியன் பார்வை களைப் ("views") பெற்றன.

சமூகவலைத் தளங்களைக் கட்டுப்படுத்துகின்ற முயற்சிகள் ஒருபுறம் நடந்தாலும் தங்கள் அரசியல் இலக்குகளை எட்டு வதற்கான பிரதான பிரசாரப் பீரங்கியாக அவற்றைப் பயன் படுத்திப் புதிய தலைமுறையி னரை வெற்றிகொள்ளத் தலை வர்கள் முயற்சிப்பது தெரிகிறது.

பிரான்ஸின் மூத்த இடது சாரி அரசியல்வாதியான 69 வய தான ஜீன் லுக் மெலென்சோன் (Jean-Luc Melenchon) அண் மையில் பிரசாரத்துக்காகத் தனது 'ரிக்ரொக்' (Tiktok) வீடி யோவை அறிமுகப்படுத்தினார்.

பொதுவாகப் பழமைபேணி வந்த அரசியல்தலைவர்கள் பலரும்கூட அடுத்த தலைமுறை வாக்காளர்களை இலக்காகக் கொண்டு நவீன ஒன் லைன் டிஜிட்டல் தொழில்நுட்ப ஊட கங்களோடு தங்களை இணைத் துக் கொள்ளத் தொடங்கியி ருப்பதை இது காட்டுகிறது.

# டிரம்ப் நம்பிக்கை துரோகி!

## அவரது அண்ணனின் மகள் காட்டம்



வாஷிங்டன், டிசெ. 07

அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் தான் செய்த குற் றத்திற்காக வெள்ளை மாளிகையை விட்டு வெளியேறியதும் சிறைக் குத் செல்லவேண்டி இருக்கும் என அவரின் அண்ணனின் மகள் அதி ரடியாக கூறியுள்ளார்.

டொனால்ட் டிரம் பின் மோசமான மறுபக் கம் பற்றி, 'ரூ மச் அண்ட் நெவர் இனப்' என்ற புத்தகத்தை எழுதியிருக்கிறார் அவரின் அண்ணனின் மகளும், மனோ தத்துவ நிபுணருமான மேரி டிரம்ப்.

அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் தான் செய்த குற்றத்துக்காக வெள்ளை மாளிகையை விட்டு வெளியேறியதும் சிறைக்குத் செல்ல வேண்டி இருக்கும் என அவரின் அண்ணனின் மகள் அதிரடியாக கூறியுள்ளார்.

டொனால்ட் டிரம்பின் மோச மான மறுபக்கம் பற்றி, 'ரூ மச் அண்ட் நெவர் இனப்' என்ற புத்தகத்தை எழுதியிருக்கிறார் அவரின் அண்ணனின் மகளும், மனோதத்துவ நிபுணருமான மேரி டிரம்ப்.

இந்த நிலையில் மேரி அளித் துள்ள பேட்டியில், அமெரிக்க முன்னாள் அதிபர்கள் மீது எந்த வழக்கும் தொடுக்கக் கூடாது என்ற மரபை, டிரம்ப் விட யத்தில் கடைபிடிக்கக்கூடாது.

டிரம்ப், ஒரு கிரிமினல், கொடூரமானவர், நம்பிக்கை துரோகி. கொரோனா பரவலை சரிவர கையாளாமல், லட்சக் கணக்கானோரை பலி கொடுத் தவர். இது போல அவர் செய்த பல குற்றங்களுக்கு, நீதிமன்றத் தில் நிறுத்தி தண்டிக்கவேண்டும்.

தேர்தலில் தோல்வி அடைந்த பிறகும், பதவி விலகாமல் பிடி வாதமாக இருப்பதில் இருந்து, அவர் குணத்தை அறியலாம். தன் வாழ்நாளில் ஒருபோதும் நேர்வழியில் வெற்றி பெறாத ஒருவர் தான் இப்படி நடந்து கொள்வார்.

பல ஆண்டுகளுக்குப் பின் டிரம்பை கடந்த 2017இல் சந்தித்தபோதும் அவரின் குணம் சிறிது கூட மாறவில்லை என்பதை உணர்ந்து கொண் டேன் என கூறியுள்ளார்.



# சாதித்து காட்டியது ரஷ்யா!

## தடுப்பூசி போடும் பணி தொடக்கம்

மொஸ்கோ,டிசெ.07

**கொரோனா வைரஸை கட்டுப்படுத்தவும், தடுக்கவும் உலக நாடுகள் கடுமையாக போராடி வருகின்றன. பல்வேறு நாடுகள் கொரோனா தடுப்பு மருந்து கண்டுபிடிப்பு இறுதிக்கட்டத்தில் உள்ளது. அந்த வகையில் ரஷ்யாவில் ஸ்புட்னிக்-5 என்ற கொரோனா தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப் பட்டுச் சோதனை முடிவு பெற்றது.**

இதனையடுத்து, ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் பொதுமக்க ளுக்கு கொரோனா தடுப்பூசி போடும் திட்டம் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக அந்த நாட்டு அரசு அறிவித்துள்ளது.

முதல்கட்டமாக மருத்துவர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட நோய்த்தொற்று அபாயம் அதிகம் உள்ளவர்களுக்கு தடுப்பூசி போடப்படுகின்றது.

முன்னதாக, ரஷ்ய விஞ்ஞானிகள் கண்டுபிடித்த ஸ்புட்னிக்-5 கொரோனா தடுப்பூசியை பொதுமக்களுக்குச் செலுத்தும் திட் டத்தை ஒரு வாரத்துக்குள் தொடங்க வேண்டும் என்று அதிகாரி களுக்கு அந்த நாட்டு அதிபர் புடின் கடந்த 2ஆம் திகதி உத்தர விட்டிருந்தார்.

அதன் தொடர்ச்சியாக, மொஸ்கோவில் 70 கொரோனா தடுப்பூசி முகாம்களை அமைத்து பொது மக்களுக்கு அந்தத் தடுப்பூசியைச் செலுத்தும் பணிகளை அதிகாரிகள் நேற்று முன் தினம் தொடங்கினர்.

உலகில் பல்வேறு நாடுகளில் சோதிக்கப்பட்டு வரும் கொரோனா தடுப்பூசிகளில் பொதுமக்கள் பயன்பாட்டுக்கான அங்கீகாரம் முதல்முறையாக ஸ்புட்னிக்-5 மருந்துக்கு தான் அளிக்கப்பட்டது. இதனையடுத்து அந்நாட்டு மக்களுக்கு செலுத்தும் பணி தொடங்கியது. விரைவில் மற்ற நாடுகளுக்கும் இந்த மருந்து வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# பழமை வாய்ந்த தேவாலயத்தில் தீ

நியூயோர்க், டிசெ.07

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் அமைந்துள்ள 120 ஆண் டுகள் பழமை வாய்ந்த கிறிஸ்த்தவ தேவாலயத்தில் நேற்றுமுன்தினம் பாரிய தீ விபத்து ஏற்பட்டது.

கிழக்கு கிராமத்திலுள்ள இந் தத் தேவாலயம் அதிகாலை 5 மணியளவில் தீப்பிடித்து எரி யத் தொடங்கியது. இந்த விபத் தில் அங்கிருந்த கட்டடம் முழு வதும் தீக்கிரையாக்கப்பட்டுள் ளது.

இதுபற்றி தகவல் அறிந்த தும் தீயணைப்பு வீரர்கள் விரைந்து வந்து தீயை அணைக் கும் பணியில் ஈடுபட்டனர். இந்த விபத்தில் உயிரிழப்பு ஏதும் ஏற்படவில்லை.



# புலிகள் மீதான தடையை நீக்குக

லண்டன், டிசெ. 07

விடுதலைப் புலிகள் மீதான பிரித்தானிய அரசின் தடை முற்று முழுதாக நீக்கவேண்டும். அதற்கான அழுத்தங்களை பாராளுமன்ற உறுப்பினர்கள் வழங்க வேண்டும் என்று தொடர்ச்சியாக புலம்பெயர் செயல்பாட்டாளர்கள் கோரி வருகின்றனர்.

இதன் இரண்டாம் கட்டமாக என்பீல்ட் நோர்த் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் கிளார்க்குடன் நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினர்.

'சூம்' செயலியில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில், நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பாராளு மன்ற உறுப்பினர் சொ.யோக லிங்கம் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நிமலன் சீவரட்ணம் மற்றும் செயற்பாட்டாளர்க ளான பிரிவின் ஜோர்ஜ் ஹமில் டன், கபிலன், அன்புரத்தினம் சுபதர்ஷா, வரதராசா சுபாம கிஷா, வரதராசா டினோஸ், நவரத்தினம் குகச்செல்வம் கோபாலகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது, புலிகள் மீதான தடையை நீக்க வலியுறுத்தப் பட்டது.

# சீன நிலக்கரிச் சுரங்கத்தில் சிக்கி 18 தொழிலாளர்கள் உயிரிழப்பு!



பீஜிங், டிசெ 07

சீனாவின் சாங்சிங் நகரிலுள்ள நிலக்கரி சுரங் கத்தில் சிக்கிய 18 தொழிலாளர்கள் மூச்சுத் திணறி உயிரிழந்துள்ளனர் எனச் செய்திகள் வெளியாகி யுள்ளன.

டயோயிடோங் சுரங்கத்தில், கடந்த வெள் ளிக்கிழமை ஏற்பட்ட நிலச்சரிவால், 23 ஊழியர் கள் வெளியே வர முடியாத சூழல் ஏற்பட்டது.

இதுவரை 18 ஊழியர்களின் உடல்களை தீயணைப்பு வீரர்கள் மீட்ட நிலையில், அதிகப்படியான காபன் மொனோசைட் வாயுவை சுவாசித்ததால் அவர்கள் உயிரிழந்தனர் என சீன அரசு தெரிவித்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

# முதலாவது டெஸ்ட் போட்டி: நியூசிலாந்து அபார வெற்றி!



மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணி இன்னிங்ஸ் மற்றும் 134 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

ஹெமில்டன்- சீடன் கார்டன் மைதானத்தில் கடந்த 3 ஆம் திகதி ஆரம்பமான இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்திய தீவுகள் அணி முதலில் களத் தடுப்பை தெரிவு செய்தது.

அதன்படி முதலில் களமிறங்கிய நியூசிலாந்து அணி, அணித் தலைவர் கேன் வில்லியம்னின் இரட்டைச் சதத்தின் உதவியுடன் 7 விக்கெட்களை இழந்து 519 ஓட்டங்களை பெற்று ஆட்டத்தை இடைநிறுத்தியது.

அவ்வணி சார்பாக கேன் வில்லியம்சன் 251 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுக்க பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக கெமார் ரோச் மற்றும் செனோன் கெப்ரியல் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இதன் பின்னர் பதிலுக்கு களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி 64 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 138 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

இதன்பிறகு 381 ஓட்டங்கள் பின்னிலையில் இருந்த மேற்கிந்திய தீவுகள் அணியை போலோ ஒன் முறையில் துடுப்பெடுத்தாட நியூஸிலாந்து அணி அழைத்தது.

அதன்படி மீண்டும் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 58.5 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 247 ஓட்டங்களை மட்டுமே பெற்று 134 ஓட்டங்களினால் தோல்வியடைந்தது.

அவ்வணி சார்பாக ஜெர்மைன் பிளாக்வுட் 104 ஓட்டங்களையும் அல்சாரி ஜோசப் 86 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பந்துவீச்சில் நியூசிலாந்து அணி சார்ப்பாக நீல் வோக்னர் 4 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

இந்த போட்டியின் ஆட்டநாயகனாக இரட்டை சதம் அடித்த நியூசிலாந்து அணித் தலைவர் கேன் வில்லியம்சன் தெரிவு செய்யப்பட்டார்.

## இன்றைய ஆட்டம்

LPL T20 LANKA PREMIER LEAGUE 2020

கொழும்பு கிங்ஸ் எதிர் காலி கிளாடியேற்றர்ஸ்

பி.ப. 3.30 மணி

தம்புள்ளை வைக்கிங் எதிர் யாழ்ப்பாணம் ஸ்ராலியன்ஸ

இரவு 7.00 மணி

# கொழும்பு அணி அபாரம்



நடைபெற்றுரும் லங்கா பிறீமியர் லீக் தொடரின் 13ஆவது போட்டியில் கொழும்பு கிங்ஸ் அணி ஏழு விக்கெட்டுகளால் கண்டி டஸ்கர்ஸ் அணியை வீழ்த்தியுள்ளது.

இந்தப்போட்டி, அம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச மைதானத்தில் நேற்று முன் தினம் மாலை நடைபெற்றது.

இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கண்டி டஸ்கர்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி, களமிறங்கிய கண்டி அணி 19.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 105 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக்கொண்டது.

அணி சார்பாக, ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ரஹ்மானுல்லா குர்பஷ் அதிகபட்சமாக 34 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்.

பந்துவீச்சில், ரி.டி.சில்வா, பிரியஞ்சன் மற்றும் ஹைஸ் அஹமட் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகளையும் மத்தியூஸ், சமீர மற்றும் ருஸ்ஸெல் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இந்நிலையில், பதிலுக்கு 106 என்ற இலகுவான வெற்றியிலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய கொழும்பு அணி, 14.1 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுகளை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் டினேஸ் சந்திமால் ஆட்டமிழக்காமல் 35 ஓட்டங்களையும் பிரியஞ்சன் ஆட்டமிழக்காமல் 26 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில், முனாப் பட்டேல், விஸ்வா பெர்னாண்டோ மற்றும் நுவான் பிரதீப் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக சமீர தெரிவு செய்யப்பட்டார்.

இந்தப் போட்டியின் வெற்றியுடன் கொழும்பு அணி, இதுவரை நடைபெற்ற ஐந்து போட்டிகளில் நான்கில் வெற்றி பெற்று ஐந்து அணிகளின் பட்டியலில் எட்டுப் புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளது.

இதேவேளை, கண்டி டஸ்கர்ஸ் அணி இதுவரை விளையாடிய ஆறு போட்டிகளில் ஒன்றில் மாத்திரம் வெற்றிபெற்று நான்காவது இடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ரி–20 தொடரை வென்றது இந்திய அணி!



அவுஸ்ரேலிய அணிக்கு எதிரான 2ஆவது ரி-20 கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட தொடரை 2:0 என்ற கணக்கில் வெற்றி பெற்றுள்ளது இந்திய அணி.

சுற்றுலா இந்திய அணிக்கும் அவுஸ்ரேலிய அணிக்கும் இடையிலான 2ஆவது ரி-20 போட்டி சிட்னியில் நேற்று நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி அவுஸ்ரேலிய அணியை முதலில் துடுப்பெடுத்தாட பணித்தது.

சொந்த மண்ணில் முதலாவது போட்டியில் தோற்ற நிலையில் எப்படியாவது வென்று தொடரை தக்கவைக்கவேண்டிய நெருக்கடியுடன் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலிய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்மு 194 ஓட்டங்களை குவித்தது.

அவுஸ்ரேலிய அணியின் சார்பில் மத்தியூவ் வடே 58 ஓட்டங்களையும், ஸ்மித் 46 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றிருந்தனர்.

பந்து வீச்சில் தமிழ்நாட்டு வீரரான நடராஜன் 4 ஓவர்கள் பந்து வீசி 20 ஓட்டங்களை மட்டும் விட்டுக் கொடுத்து 2 விக்கெட்டுக்களை கைப்பற்றியிருந்தார்.

தொடர்ந்து 196 என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 19.4 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 195 ஓட்டங்களைப் பெற்று 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்திய அணி தரப்பில் தவான் 52 ஓட்டங்களையும், விராட் கோலி 40 மற்றும் கே.எல்.ராகுல் 30 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்திருந்தனர். இந்நிலையில் அதிரடியாக விளையாடி இறுதிவரை ஆட்டமிழக்காது 42 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஹர்த்திக் பாண்டியா ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

மூன்று போட்டிகள் கொண்ட தொடரில் ஒரு போட்டி மீதமிருக்கும் நிலையில் இந்திய அணி முதல் இருபோட்டிகளிலும் வெற்றி பெற்றதன் மூலம் 2:0 என்ற அடிப்படையில் தொடரை கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிளாடியேட்டர்ஸ் அணியை வீழ்த்திய தம்புள்ளை வைக்கிங்

முதலாவது லங்கா பிரீமியர் லீக் தொடரின் 12 ஆவது போட்டியில் தம்புள்ளை வைக்கிங் அணி 9 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

இந்த போட்டியில் தம்புள்ளை வைக்கிங் மற்றும் காலி கிளாடியேட்டர்ஸ் ஆகிய அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய தம்புள்ளை வைக்கிங் அணி, 7 விக்கெட் இழப்புக்கு 207 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

தம்புள்ளை வைக்கிங் அணி சார்பில், உபுல் தரங்க 77 ஓட்டங்களையும், நிரோஷன் டிக்வெல்ல 60 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

இந்த நிலையில், 208 எனும் இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய கோல் கிளாடியேட்டர்ஸ் அணி, 7 விக்கெட் இழப்புக்கு 198 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

காலி கிளாடியேட்டர்ஸ் அணி சார்பில் தனுஷ்க குணாதிலக்க 78 ஓட்டங்களையும் அசாம் கான் 55 ஓட்டங்களையும், பெற்றுக் கொடுத்தனர்.

இந்த நிலையில், போட்டியின் சிறப்பாட்டக்காரராக அன்வர் அலி தெரிவு செய்யப்பட்டார்.



# “இன்றே எனது இறுதிநாள்” சபையில் கூறினார் ரஞ்சன்

கொழும்பு,டிசெ.07

**என்மீது தொடுக்கப்பட்டுள்ள வழக்கொன்று விசாரணைக்கு எடுக்கப்பட வுள்ளதால் நாளை 8 ஆம் திகதி நான் சிறைக்குச் செல்லவுள்ளேன். எனவே இன்றே எனது பாராளுமன்ற இறுதி நாள் என நினைக்கின்றேன். எப்படியும் என்னை இரண்டு ஆண்டுகளுக்கு சிறையிலடைப்பார்கள் என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சுக்கள், இராஜாங்க அமைச்சுக்களுக்கான நிதியொதுக்கீட்டு குழு நிலை விவாதம் இடம்பெற்ற போது உரையாற்ற ஆரம்பித்த ரஞ்சன் ராமநாயக்க, நீதிமன்ற விசாரணைகள் தொடர்பிலும், ஷானி அபேசேகரவின் வழக்குகள் தொடர்பிலும் பேசினார். இந்த அரசாங்கம் குற்றவாளிகளைக் காப்பாற்றவும், குற்றவாளிகளுக்கு எதிரானவர்களைத் தண்டிக்கவும், துரிதமாக நடவடிக்கை எடுத்து வருகின்றது. நீதியை நிலைநாட்டுவோம்என்று கூறி ஆட்சிக்கு வந்த ராஜபக்ஷ அரசாங்கம்இன்று குற்றவாளிகள் அனைவரையும் விடுவித்து வருகின்றது.

இதன்போது ஆளும் கட்சி உறுப்பினர்கள் ரஞ்சன் ராமநாயக்க எம்.பிக்கு எதிராகக் குரலெழுப்பி அவரது உரையைக் குழப்ப ஆரம்பித்தனர். எனினும் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் பேசிக் கொண்டிருந்த ரஞ்சன் எம்.பி, சிறையிலுள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்கவின் வழக்குகள், பிள்ளையான் விடுவிக்கப்பட்ட தன் பின்னணி என்ற காரணிகள் பற்றிக் கூறினார். இதன்போது கடும் எதிர்ப்பு ஆளும் தரப்பி லிருந்து எழுந்தது.

இந்நிலையில் தொடர்ந்து கூறிய ரஞ்சன் எம்.பி. ‘சபாநாயகர் அவர்களே! நாளை 8 ஆம் திகதி சிறைக்குச் செல்லவுள்ளேன். எனக்கு இன்றே பாராளுமன்றத்தில் இறுதிநாள் என நினைக்கின்றேன். எனக்கு எதிராக பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ வழக்கொன்றைத் தொடுத்துள்ளார். எனவே இந்த வழக்கில் என்னை நிச்சயமாக சிறையிலடைப்பார்கள். குறைந்தபட்சம் ஆறு மாதங்கள், கூடியது இரண்டு ஆண்டுகள் சிறையிலடைப்பார்கள். எனவே என்னை உரையாற்ற இடமளியுங்கள்- என்றார். (எ)





# இந்து சிவாச்சாரியர்களுக்கு அங்கீகாரம் வழங்கப்படும்

## அமைச்சர் டக்ளஸ் உறுதி

கொழும்பு,டிசெ.07

இந்து ஆலய சிவாச்சாரியார்களுக்குத் தேவையான அங்கீகாரம் பெற்றுக்கொடுப்பதுடன் வாழ்வாதார அபிவிருத்தியும் ஏற்படுத்தப்படும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்தார்.

மாளிகாவத்தையில் அமைந்துள்ள அமைச்சு அலுவலகத்தில் நேற்று முன்தினம் கடல்தொழில் அமைச்சரைச் சந்தித்த சர்வதேச இந்து மத பீடத்தின் செயலாளர் கலாநிதி இராமநாதக்குருக்கள் மற்றும் உபதலைவர் இராமநாத திருச்செந்திநாதக் குருக்கள் ஆகியோருடனான கலந்துரையாடலின்போதே கடல்தொழில்அமைச்சரால் இவ்வாறு உறுதிமொழி வழங்கப்பட்டது.

இந்தச் சந்திப்பின்போது, ஆலயத்தில் பணிபுரிகின்ற சிவாச்சாரியார்கள் சமூகப் பணிகளை மேற்கொள்ள வேண்டிய காலச் சூழல் ஏற்பட்டுள்ள நிலையில் அதற்கான அரசாங்க அங்கீகாரம் வழங்கும் வகையில் சமாதான நீதிவான் பதவிகளை வழங்கிக் கௌரவிக்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

மேலும் கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த கால யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிவாச்சாரியார்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையில் முதல்கட்டமாக சுமார் 50 வீடுகளைக் கொண்ட அந்தணர் குடியிருப்பு தொகுதி அமைத்துக் கொடுக்க வேண்டும் போன்ற பல்வேறு கோரிக்கைகள் அமைச்சரிடம் முன்வைக்கப்பட்டன. (எ)

# 24 மணிநேரத்தில் 45 பேர் சிக்கினர்

கொழும்பு,டிசெ.07

முகக்கவசம் அணியத் தவறிய மற்றும் சமூக இடைவெளியைப் பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டுக்கள் அடிப்படையில் நேற்றுக் காலை 9 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணிநேரப் பகுதியில் 45 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

கடந்த ஒக்ரோபர் 31 ஆம் திகதி முதல் நேற்று வரையான காலப்பகுதியில் 1,172 கைது செய்யப்பட்டனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றத் தவறும் நபர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ள பொலிஸார் தொடர்ந்தும் ரோந்துப் பணிகளை முன்னெடுப்பர் என்றும் அவர் கூறினார். (எ)

## மஹர சிறையில் கொரோனா தொற்றாளர்:

# உடலை எரிப்பதா? புதைப்பதா? இவ்வாரம் இறுதித் தீர்மானம்

கொழும்பு,டிசெ.07

மஹர சிறைச்சாலையில் இடம்பெற்ற கலவரத்தின் போது கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான நிலையில் உயிரிழந்த கைதிகள் உடலைத் தகனம் செய்வதா? அல்லது புதைப்பதா? என்ற தீர்மானம் இந்த வாரம் எடுக்கப்படும் என்றும்

கொரோனா வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்தி தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த நாட்டு மக்கள்ஒத்துழைப்பு வழங்க வேண்டும்என்றும்தொலைநோக்கு கல்வி இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில்அவர்இவ்வாறு குறிப்பிட்டார்.



அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன குறுகிய காலத்தில் மக்கள் ஆணையை முழுமையாகப் பெற்றுள்ளது. 2015 ஆம் ஆண்டு அரசியல் ரீதியாக ஏற்பட்ட தவறை நாட்டு மக்கள் ஜனநாயக ரீதியாகத் திருத்தி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் பலமான அரசாங்கத்தை ஸ்தாபித்தனர்.

நல்லாட்சி அரசாங்கத்தில்அரசியல் பழிவாங்கல் தீவிரமாகக் காணப்பட்டது. போலிக் காரணங்களை அடிப்படையாகக் கொண்டு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் முக்கிய தரப்பினர் மீது வழக்குகள் தொடுக்கப்பட்டன. ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து நீதித்துறை பலப்படுத்தப்பட்டுள்ளது. நீதிமன்ற கட்டமைப்பு சுயாதீனப்படுத்தப்பட்டது. பலருக்கு தற்போது நீதி கிடைக்கப்பெற்றுள்ளது.

மஹர சிறைச்சாலையில் கடந்த மாதம் இடம்பெற்ற அமைதியின்மை தொடர்பில் மாறுபட்ட கருத்துக்கள் அரசியல் மட்டத்தில் குறிப்பிடப்படுகின்றன.

இச்சம்பவத்தின் உண்மைத் தன்மையை வெளிக்கொணரும் நோக்கில் உயர்மட்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இதன்போது உயிரிழந்த கைதிகள் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் இவர்களின் உடலைப் புதைப்பதா? அல்லது தகனம் செய்வதா? என்ற பிரச்னை எழுந்துள்ளது. இவ்விடயத்தில் நீதிமன்றத் தீர்ப்பை அடிப்படையாகக் கொண்டு செயல்படுவது சிறந்தது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. நீதிமன்றத்தின் தீர்மானம் இவ்வாரம் கிடைக்கப் பெறும். கொரோனா வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்த நாட்டு மக்கள் தொடர்ந்து முழுமையான ஒத்துழைப்பு வழங்க வேண்டும்- என்றார். (எ)

# 200 கிலோ போதைப்பொருளுடன் நேற்று அதிகாலை நால்வர் சிக்கினர்

கொழும்பு,டிசெ.07

100 கிலோ கிராம் ஹெரோயின் மற்றும் 100 கிலோ கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் தொடுவ, மாரவில பகுதியில் நால்வர் கைதுசெய்யப்பட்டனர்.

கலால்திணைக்கள அதிகாரிகள் நேற்று அதிகாலை மேற்கொண்ட திடீர்சோதனை நடவடிக்கையின் போது இவர் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன் போதைப்பொருள்களைக் கொண்டுசெல்ல பயன்படுத்திய வாகனங்களையும் அதிகாரிகள் கைப்பற்றினர். (எ)

# ஆழ்கடல் சென்ற மீனவர் மரணம்!

திருகோணமலை,டிசெ.07

திருகோணமலையிலிருந்து மிதுல புதா என்ற டெங்கி படகில் ஆழ்கடலுக்குச் சென்ற மீனவர் உயிரிழந்தார்.

கடந்த 21ஆம் திகதி ஐந்து பேர் கடலுக்குச் சென்றனர். இந்நிலையில் இந்த மீனவர் இம்மாதம் 2ஆம் திகதி உயிரிழந்தார் என ஆரம்பகட்ட விசாரணை மூலம் தெரியவந்தது.

இவரது மரணத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. நேற்று முன்தினம் இரவு கரைக்கு கொண்டுவரப்பட்ட அவரது சடலம் திருகோணமலை பொது மருத்துவமனை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

உடதெனிய ரக்லிய பகுதியைச்சேர்ந்த எம்.எம்.எஸ்.ரோஷன் என்ற 31 வயது நபரே இவ்வாறு உயிரிழந்தார். (எ)


## வாழ்வகம் விழிப்புலன் வலுவிழந்தோர் இல்லம்

### புதிய மாணவர் அனுமதி - 2021

வடக்கு மாகாணம், யாழ்ப்பாணம், சுன்னாகம், சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள வாழ்வக நிறுவனத்தில் கண் பார்வையற்ற அல்லது குறைந்த பார்வையுடைய பிள்ளைகளை இணைத்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் 2021 ஆம் ஆண்டுக்காகக் கோரப்படுகின்றன. பிள்ளைகளுக்கான உணவு, உடை, தங்குமிடம் மற்றும் கல்விக்கான அனைத்து வசதிகளும் கவின் கலைகள், மேலதிக வகுப்புக்கள், ஆளுமை விருத்திக்கான செயற்பாடுகள், கணினிக் கற்கைகள், தியானம், சுகாதார, மருத்துவ வசதிகள், விளையாட்டு வசதிகள் என்பன முற்றிலும் இலவசமாக வழங்கப்படும்.

மேற்குறிப்பிட்டவாறான நிலைமைகளை உடைய இலங்கை வாழ் தமிழ் மொழி பேசும் பிள்ளைகளின் பெற்றோர்கள் எதிர்வரும் **23.12.2020** க்குப் பிந்தாமல் கீழ்க் காணும் முகவரியுடன் தொடர்புகொண்டு தங்கள் பிள்ளைகளின் வளமான எதிர்காலத்துக்கு வழிசமைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**குறிப்பு:** பிள்ளைகளை விடுதியில் அனுமதித்து, சனி, ஞாயிறு தினங்களில் பெற்றோர் சந்திக்க வசதி செய்வதுடன், பாடசாலை விடுமுறை தினங்களில் விரும்பின் தமது இல்லங்களுக்குச் சென்றுவரவும் அனுமதிக்கப்படுவர்.

**தொடர்பு - தலைவர், வாழ்வகம், சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம்.**

**தொலைபேசி- 021 224 0146, 076828 6331.**

# கொரோனா தொற்றுக்குள்ளான மேலும் 370 பேர் குணமடைவு!

கொழும்பு,டிசெ.07

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 370 பேர் நேற்று மாலை 4 மணிவரையான காலப்பகுதியில் குணமடைந்து மருத்துவமனைகளிலிருந்து வெளியேறினர்.

இதன்மூலம் நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி குணமடைந்த நோயாளர்கள் எண்ணிக்கை 20 ஆயிரத்து 460 ஆக உயர்வடைந்துள்ளது.

தற்போது நாடு முழுவதுமுள்ள மருத்துவமனை மற்றும் சிகிச்சை நிலையங்களில் 6,631 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். (எ)

# ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்பு இதுவரை 257 பேர் சிறைக்குள்

## அமைச்சர் சரத் வீரசேகர கூறுகிறார்



கொழும்பு,டிசெ.07

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதலுடன் நேரடியாகத் தொடர்புபட்ட 257 பேர் தடுப்புக்காவலில் உள்ளனர். இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டிய பொறுப்பு சட்டமா அதிபர் கைகளில் உள்ளது எனத் தெரிவித்த, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, இன்று திங்கள்கிழமை சட்டமா அதிபரைச் சந்தித்து வழக்குகளைத் துரிதப்படுத்த வலியுறுத்துவோம் என்றும் கூறினார்.

ராஜபக்ஷ அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒரு வருடம் கடந்துள்ள போதிலும் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணைகளில் எந்தவித முன்னேற்றமும் தென்படவில்லை எனவும் குற்றவாளிகளைக் கண்டறிய அரசாங்கம் என்ன நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் சபையில் கேள்வி எழுப்பியபோது அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

குற்றப்புலனாய்வுப் பிரிவு, பயங்கரவாதத் தடுப்புப் பிரிவால் ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புபட்ட 171 பேர் கைது செய்யப்பட்டனர். மேலும் 86 பேர் தடுப்புக்காவலில் உள்ளனர். மொத்தமாக 257 பேர் இந்தச் சம்பவத்துடன் தொடர்புபட்டுள்ளனர் என அடையாளம் கண்டுள்ளோம். இவர்கள் தொடர்பில் வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன.

எனவே இன்று சட்டமா அதிபரைச் சந்தித்து சட்ட நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த வலியுறுத்தவுள்ளேன். அரசாங்கமாக நாம் சகல நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளோம்.

மனிதப் படுகொலை மற்றும் சதித்திட்டம் தொடர்பான முழுமையான விசாரணைகள் முடிந்துவிட்டன. இதில் அடையாளம் காணப்பட்டுள்ள 257 பேரும் குற்றத்துடன் நேரடியாகத் தொடர்புபட்டவர்கள். எனவே இவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டியது மட்டுமே தற்போதுள்ளது- என்றார். (எ)




**காலை**

*5.15 மணி - தரம் 06 தமிழ்*
*6.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்*
*6.45 மணி - தரம் 08 கணிதம்*
*7.30 மணி - தரம் 09 வரலாறு*
*8.15 மணி - தரம் 10 விஞ்ஞானம்*
*9.00 மணி - க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) தமிழ்*
*10.00 மணி - பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்*
*11.00 மணி - க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) கணிதம்*

**பகல்**

*12.00 மணி - தரம் 06 தமிழ்*
*1.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்*
*2.00 மணி - தரம் 08 கணிதம்*
*3.00 மணி - க.பொ.த சாதசரண தரம் விவசாயம்*
*3.40 மணி - க.பொ.த சாதாரண தரம் கத்தோலிக்கம்*
*4.20 மணி - க.பொ.த சாதாரண தரம் ஆங்கிலம்*
*5.00 மணி - க.பொ.த சாதாரண தரம் கணிதம்*
*5.40 மணி - க.பொ.த சாதாரண தரம் தகவல் தொழில்நுட்பம்*
*6.20 மணி - க.பொ.த சாதாரண தரம் வரலாறு*

**இரவு**

*7.00 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள் கணிதம்*

# வெள்ள அனர்த்தத்தை கட்டுப்படுத்த மக்கள் ஒத்துழைக்க வேண்டும்

## யாழ்.அரச அதிபர் மகேசன் கோரிக்கை

**யாழ்ப்பாணம், டிசெ.07**

**வெள்ள அனர்த்த நிலைமையைக் கட்டுப்படுத்த பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.**



யாழ். மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள அனர்த்த நிலை தொடர்பில் ஆராயும் விசேட கூட்டம் அரசாங்க அதிபர் தலைமையில் நேற்று மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தின்போது நிவர் மற்றும் புரெவிப் புயல் தாக்கத்தால் யாழ்.மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள், இடைத்தங்கல் முகாம்களில் வசிக்கும் மக்களின் நிலை தொடர்பில் ஆராயப்பட்டது.

இக்கூட்டத்தில் மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன், யாழ். மாநகர சபை முதல்வர் இ.ஆனல்ட், மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரி. என்.சூரியராஜா, பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், சுகாதாரத் துறையினர், இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் கலந்து கொண்டனர்.

கூட்ட நிறைவில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த அரசாங்க அதிபர் தெரிவித்தவை வருமாறு:

யாழ். மாவட்டத்தில் புரெவிப் புயல் ஏற்படுத்திய தாக்கம் தொடர்பிலும் அதனுடைய தாக்கத்தைமதிப்பீடு செய்வதற்கும் அதேபோன்று இயல்பு நிலையை மீளக்கட்டியெழுப்புதல், நிவாரண நடவடிக்கைகளை கண்காணிக்க இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

அதிக வெள்ளத்தால் வீடுகளில் தங்க முடியாதவர்கள் தற்காலிகமாகத் தங்க வைக்கப்பட்டுள்ள பாடசாலைகளை, தற்காலிக நலம் புரி நிலையங்களை மூடி அல்லது இடம் மாற்றி பாடசாலைகளைத் திறக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல். அதேபோன்று பாடசாலைகளைச் சுத்தப்படுத்தி இயல்பு நிலையை மீள ஏற்படுத்தல்.

அதேநேரம் சுகாதார நடவடிக்கைகளை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் போன்ற விடயங்கள் ஆராயப்பட்டன. மேலும் இந்த நடவடிக்கைகளை பிரதேச செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி சபையினரின் உதவிகளைப் பெற்று செயல்படுத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

கல்வித் திணைக்களம் மற்றும் ஏனைய திணைக்களத்தினரின் உதவியுடன் இதனைச் செயல்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமைத்த உணவு வழங்குதல் போன்ற விடயங்களும், பாதிக்கப்பட்ட மக்களுடைய தேவைகள் பற்றியும் கண்டறியப்பட்டது அதனடிப்படையில் தற்போதுள்ள வளங்களைக்கொண்டு எவ்வாறான உதவிகளை வழங்க முடியும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள், உள்ளூராட்சி சபையினருக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும். கழிவுப்பொருள்களை வீசுதல், வடிகால்களை மூடுதல் அல்லது தேவையற்ற பொருள்களை பொதுஇடங்களில் வீசுதல் போன்ற செயல்பாடுகளால் வெள்ளம் தேங்கும் அவலநிலை ஏற்படுகின்றது.

இயற்கையாக வெள்ளம் வழிந்தோடக் கூடிய வடிகால்களையும் அதேபோன்று வீதிகளை அமைக்கும் போதும் விசேட கவனம் எடுத்து அதை பராமரிப்பதற்கும் வெள்ள வாய்க்கால் மூடப்படாது தடுப்பதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

யாழ். மாநகர சபை இந்த விடயங்களை தொடர்ந்து முன்னெடுக்கும்போது, வெள்ள நிலைமையைச் சமாளிக்கக் கூடியதாக இருக்கும்.

இதனைவிட புயலால் ஏற்பட்ட சேத விவரங்கள் குறிப்பாக விவசாயம், மீன்பிடித்துறைக்கு ஏற்பட்டிருக்கும் சேத விவரங்கள், கைத்தொழில் முயற்சியாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் பற்றிய விவரங்கள் கடல் அரிப்பு, ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளுக்கு ஏற்பட்டுள்ள பிரச்னைகள், கல்வி, சுகாதாரம், மின்சார சபை போன்ற பல்வேறுபட்ட தரப்பினர்களுக்கு ஏற்பட்ட சேதங்களை மதிப்பீடு செய்து ஒரு துரித மதிப்பீடு அறிக்கை ஒன்றைத் தயாரிக்குமாறு பிரதேச செயலாளர்களுக்கு அறிவித்திருக்கின்றோம்- என்றார். (எ)

# எந்தவொரு போதைமாத்திரையும் கிடையாது: மருத்துவத்துறையை முட்டாளாக்கிறது அரசு

## டாக்டர் ராஜித குற்றச்சாட்டு



கொழும்பு,டிசெ.07

மஹர சிறைச்சாலையில் ஏற்பட்ட கலவரத்துக்கு காரணம் என்று கூறப்படுவதைப் போன்று போதை மாத்திரை எங்கும் இல்லை. சிலரது குறைகளை மறைக்க மருத்துவத்துறையை முட்டாளாக்கும் வகையில் அரசாங்கம் பொய்களைக் கூற முடியாது என்று பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு: போதை மாத்திரை பாவனையே மஹர சிறைச்சாலை கலவரத்துக்குக் காரணம் என்று கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. மேற்கத்தேய மருந்துகளில் எங்கும் போதை மாத்திரை இல்லை. நித்திரைக்கான சில வில்லைகள் மாத்திரமே உள்ளன.

இதேபோன்று மன அழுத்தங்களைக் குறைக்க சில மருந்துகளும், பதற்றமாக உள்ளவர்களை அமைதிப்படுத்துவதற்கான மருந்துகளும் உள்ளன. அதாவது இந்த மாத்திரைகள் எதனையும் பயன்படுத்தி யாரும் போதையாவதில்லை. எனவே அரசாங்கம் இவ்விடயத்தில் பெரும் பொய் கூறுகிறது.

கொலைகாரர்களைப் பாதுகாப்பதற்கு இவ்வாறு கூறுகின்றனர். மனநல விசேட மருத்துவ நிபுணர்கள் இதுதொடர்பில் தெளிவான அறிக்கை வெளியிட்டுள்ளனர். எனவே அரசு கூறுவதைப் போன்று ஒரு மருந்து இல்லை. போதையை இல்லாமலாக்குவதற்கான மாத்திரைகள் இருக்கின்றனவே தவிர போதைக்கான மாத்திரை என ஒன்றும் இல்லை.

சிலரது குறைபாடுகளை நிவர்த்தி செய்ய இவ்வாறு பொய் கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. இதனால் மருத்துவத்துறையினர் மீதும் குற்றம் சாட்டப்படுகிறது. மருத்துவத்துறை பற்றி எதுவும் அறியாதவர்களே இவ்வாறான விடயங்களைக் கூறுகின்றனர்- என்றார். (எ)

ஈழநாடு
Eelanadu

# தமிழ் மக்களுக்கு எதிரான அச்சுறுத்தல்கள் அதிகரிப்பு

## இராதகிருஷ்ணன் எம்.பி. அச்சம்!

நுவரெலியா, டிசெ. 07

'தமிழ் மக்களுக்கு இந்நாட்டில் அச்சுறுத்தல்கள் அதிகரித்துள்ளன", என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான வீ.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

தலவாக்கலையில் நேற்று அவர் நடத்திய ஊடக சந்திப்பிலேயே இதனைக் கூறினார். மேலும், "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனநாயக முறைப்படியே பாராளுமன்றத்துக்கு தெரிவாகினர். மக்கள் சார்பில் பாராளுமன்றத்தில் கருத்துகளை கூறுவதற்கும் உணர்வுகளை வெளிப்படுத்தும் உரிமை அவர்களுக்கு இருக்கின்றது.

தடைசெய்யப்பட்ட ஓர் அமைப்பு தொடர்பில் அல்லாமல் ஏனைய விடயங்களை பேசுவதற்கான அனுமதி அவர்களுக்கு இருக்கின்றது. தற்போது பாராளுமன்றத்தில் துவேசம் கக்கும் உறுப்பினர்களே அதிகம் இருக்கின்றனர். அவ்வாறான அமைச்சர்தான் கூட்டமைப்பை தடை செய்யவேண்டும் என்கிறார். அவருக்கு அதற்கான அதிகாரம் கிடையாது. மக்கள் நினைத்தால் மட்டுமே அதனை செய்யமுடியும். அவரின் கருத்தை நாம் கண்டிக்கின்றோம். இதேபோல சரத் பொன்சேகாவின் கருத்துக்களையும் கண்டிக்கிறோம்", என்றார்.

இலவச ஆங்கில, கணினி வகுப்புகள்

ONLINE COURSES பிரிவு 30
(INDIVIDUAL/GROUP)

➪ENGLISH COURSES
- Foundation Diploma in English
- Diploma in English
- Diploma in Spoken English
- Diploma in Teaching English

➪ICT COURSES
- Diploma in MS-Office
- Diploma in ICT
- Diploma in H/W & Networking

காலம்: மூன்று மாதங்கள்
சான்றிதழ் வழுங்கப்படும்

ஆரம்பம்: சனி, ஞாயிறு12,13/12/2020
10.00 AM- 01.00 PM

கற்கைப்பிரிவில்:
- பாடசாலை மாணவர்கள்
- உ/த பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள்
- உத்தியோகத்தர்கள் அரச, தனியார்

இணைய முடியும்.

மாணவர்கள் தமது பதிவினை அலுவலகத்தில் உறுதிப்படுத்தி Zoom வகுப்பில் இணைய முடியும். க.பொ.த (உ/த) பரீட்சைக்கு தோற்றிய மாணவர் களுக்கு மட்டும் விசேட பிரிவு ஆரம்பமாகின்றது. சுகாதார நடைமுறைகளை பின்பற்றி அலுவலகத்தில் பதிவுசெய்ய முடியும்.

On-line IELTS
வகுப்புகள் ஆரம்பமாகின்றன

பதிவு:
Type your Name, Course Name to
076 6852529/ 077 602 1794

IPS
பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

# இலங்கை கடலில் பிறநாடுகளின் மீனவர்கள் மீன்பிடிக்கத் தடை

## நடவடிக்கைக்கு தயாராகிறார் பிரதமர்



கொழும்பு, டிசெம்பர் 07

**இலங்கை கடற்பரப்புக்குள் பிற நாட்டவர்கள் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுப்படுவதை தடுக்க உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.**

அபிவிருத்தி செய்யப்பட்ட அம்பாந்தோட்டை - ராகவ - நங்கூரம்பொல மீன்பிடி துறைமுக நேற்று திறந்து வைத்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் தற்போது 22 மீன்பிடி துறைமுகங்கள் உள்ளன. தேசிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் மீன்பிடி கைத்தொழில்முக்கிய பங்கு வகிக்கிறது. 30 வருடகால யுத்தத்தினால் வடக்கு மக்களின் பிரதான வாழ்வாதாரமான மீன்பிடி கைத்தொழில் பாதிக்கப்பட்டுள்ளது. தற்போது வடக்கில் மீன்பிடி கைத்தொழில் மேம்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட ஒரு தீவாக காணப்பட்டாலும் பிற நாடுகளில் இருந்து மீன் இறக்குமதி செய்யப்படுகின்றது. இதற்கு பல்வேறு காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன. இலங்கை கடற்பரப்பில் பிற நாட்டவர்கள் மீன்பிடி தொழிலில் ஈடுபடுகிறார்கள். இதனைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடல்வளங்களைப் பாதுகாக்க அரசாங்கம் சிறந்த திட்டம் வகுத்துள்ளது. விவசாயத்துறைக்கும், மீன்பிடி கைத்தொழிலுக்கும் முன்னுரிமை வழங்கப்படும். மீன்பிடி கிராமங்கள் பல அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.

# விமான நிலையம் மீளத் திறத்தல் முக்கிய கலந்துரையாடல் இன்று

கொழும்பு, டிசெ. 07

கொரோனா தொற்று பரவல்காரணமாக மூடப்பட்டிருக்கும் விமான நிலையங்களை மீளவும் திறப்பது தொடர்பில் முடிவு எடுப்பதற்கான கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

இலங்கையில் கொரோனா தொற்று 2வது அலை ஆரம்பித்த பின்னர் விமான நிலையத்தை மீண்டும் திறப்பது குறித்து ஆராய்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்வதற் காக சுகாதார அமைச்சுடன் இணைந்ததாக குழுவொன்று அமைக்கப்பட்டிருந்தது.

அக்குழுவின் ஏற்பாட்டிலேயே இன்றையதினம் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. சுகாதார அமைச்சின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்தக் கலந்துரையாடலில், விமான நிலையத்தை மீண்டும் திறப்பது, சுற்றுலாப் பயணிகளை மீண்டும் நாட்டிற்குள் அனுமதிப்பது குறித்துப் பேசப்படும் என்று தெரிய வருகின்றது. (ஐ)

# கடற்படைக்குள் மீண்டும் கொரோனா

கொழும்பு, டிசெ. 07

காலி கடற்படை முகாமைச் சேர்ந்த சிப்பாய்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலி கடற்படை முகாமில் கொரோனா தொற்றாளர்கள் சிலர் அடையாளம் காணப்பட்ட நிலையில் அவர்களுடன் தொடர்பில் இருந்த அடிப்படையில் தனிமைப்படுத்தப்பட்ட சிப்பாய்களிடம் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

வாடகைக்கு இடம் தேவை

யாழ். நகரை அண்மித்த பகுதியில் (5 km இற்குள்) சிறிய நிறுவனம் ஒன்றிற்கு முற்பணமில்லாமல் வாடகைக்கு இடம் தேவை.

தொடர்புகளுக்கு:
076 300 5506




அருந்ததி
இணைய திருமண சேவை

| மணமகன் விபரம் | மணமகள் விபரம் |
| --- | --- |
| 16427\| வே \|1983<br>கைதடி\| இந்து<br>Accountant \| Sri lanka<br>ரேவதி (மீனம்) \|175செ.மீ | 16838\| ப \|1988<br>யாழ்நகரம்\| இந்து<br>Graduate Teacher \| Sri lanka<br>பூராடம்(தனுசு)\|165செ.மீ |
| 16691\| வே \|1983<br>பொலிகண்டி \| இந்து<br>Managing Director \| Sri Lanka \|மிருகசீரிடம் (ரிஷபம்) \|172செ.மீ | 16379 \| ந \|1988<br>சாவகச்சேரி\| இந்து<br>Development Officer \|Sri lanka \|மகம் (சிம்மம்) \|146செ.மீ |
| 16469 \| வே \|1983<br>கொக்குவில் \| இந்து<br>Radiator Company Supervisor \|Australia \|செவ் 04 \|மிருகசீரிடம் (ரிஷபம்) | 16694\| கோ \|1992<br>கோப்பாய்\| இந்து<br>Teacher \| Sri lanka<br>ஆய்யிலியம்(கடகம்)\|154செ.மீ |
| 16216 \| வி \|1984<br>முனைதீவு\| இந்து<br>Assistant District Registar \| Canada\|திருவோணம் (மகரம்) \|172செ.மீ | 16285 \| வே \|1989<br>திருநெல்வேலி \|இந்து\|Doctor \| Srilanka\| சுவாதி (துலாம்)\|செவ் 02 \|161செ.மீ |
| 16249 \| வே \|1986<br>யாழ்நகரம்\| இந்து<br>Insurance Assistant(Grade 2) \|Sri lanka\|செவ் 07\| சதயம் ( கும்பம்) \|165செ.மீ | 16334\| வே \|1990<br>அளவெட்டி \| இந்து<br>Development Officer\| Sri lanka \|ரோகினி(ரிஷபம்)\|153செ.மீ |

20, கே.கே.எஸ் வீதி கொக்குவில் யாழ்ப்பாணம்
0777 164 524 www.arunthathee.com

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக. சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் : திருதி கோகிலா மகேந்திரன் உளவளத் துணையாளர்
7.15 மணி : கதைவழி அறமொழி
திரு. யோன்சன் ராஜ்குமார்
ஆசிரிய ஆலோசகர் யாழ் கல்வி வலயம்



7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ



12.00 மணி : சிரிக்கலாம் வாங்க
**பகல்**
1.00 மணி : அறிந்தும் அறியாமலும் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ் திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்



5.00 மணி : டிக் டொக்
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : பத்துக்கு பத்து
6.30 மணி : நலம்தானா
**இரவு**
7.00 மணி : சொற்சமர்
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சாட்சியம்



9.30 மணி : நட்சத்திர கொமடி
10.00 மணி : யாவரும் கேளீர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் சூரி நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : டொப் 20
11.00 மணி : ரிவைன்ட் ராகங்கள்
**பகல்**
12.00 மணி : நட்சத்திரம்
1.00 மணி : மஞ்சள் வெயில் மாலையிலே (நேரலை)
3.00 மணி : எங்கேயும் எப்போதும்
4.00 மணி : வீக் என்ட் எக்ஸ்ப்றஸ் (நேரலை)
5.00 மணி : என்றென்றும் இசை
**இரவு**
7.00 மணி : பாட்டு தலைவர்கள்
8.00 மணி : பச்சை கிளி முத்துச்சரம்
9.00 மணி : அண்பிளக் சோ
10.00 மணி : பாடும் நிலா

## கல்வி TV CHANNEL-1

**காலை**
5.15 மணி - தரம் 06 தமிழ்
6.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
6.45 மணி - தரம் 08 கணிதம்
7.30 மணி - தரம் 09 வரலாறு
8.15 மணி - தரம் 10 விஞ்ஞானம்
9.00 மணி - க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) தமிழ்
10.00 மணி - பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி - க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) கணிதம்
**பகல்**
12.00 மணி - தரம் 06 தமிழ்
1.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
2.00 மணி - தரம் 08 கணிதம்
3.00 மணி - க.பொ.த சாதசரண தரம் விவசாயம்
3.40 மணி - க.பொ.த சாதாரண தரம் கத்தோலிக்கம்
4.20 மணி - க.பொ.த சாதாரண தரம் ஆங்கிலம்
5.00 மணி - க.பொ.த சாதாரண தரம் கணிதம்
5.40 மணி - க.பொ.த சாதாரண தரம் தகவல் தொழில்நுட்பம்
6.20 மணி - க.பொ.த சாதாரண தரம் வரலாறு
**இரவு**
7.00 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள் கணிதம்

## ஓம் ரிவி

**காலை**
5.00 சிவாய மந்திரம்
6.00 சுப்ரபாதம்
07.00 இன்றைய சிந்தனை
07.05 இன்றைய நாள்
07.20 சின்மய சிந்தனை
07.30 மங்கள இசை
08.00 விநாயகர் புராணம்
08.30 திருவாசகம்
09.00 யாழ்ப்பாணம் மருதனார்மடம் ஆஞ்சநேயர் கோவில் திருவிழா
10.00 ஐயப்பன் பாடல்கள்
10.30 பஜனை
11.00 பக்திமலர்
**பகல்**
12.00 மணி திரையில் பக்தி
12.30 மணி யாழ்ப்பாணம் மணியர்பதி சிவசுப்ரமணியர் கோவில் திருவிழா
6.00 மணி கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி செய்திகள்
7.30 மணி விநாயகர் புராணம்
08.00 மணி யாழ்ப்பாணம் மருதனார்மடம் ஆஞ்சநேயர் கோவில் திருவிழா

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி - ஆலயப் பாடலகள்
8.00 மணி - ஜெபமாலை
9.00 மணி - மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி - திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி - குழந்தை யேசு மன்றாட்டு
11.30 மணி - ஜெபமாலை
**பகல்**
12.00 மணி - திருகோணமலைத்திருப்பலி
1.00 மணி - மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி - நற்சிந்தனை
3.00 மணி - பாடல்
4.30 மணி - திருகோணமலை திருப்பலி

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.12.2020 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.